கலா சிந்தாமணி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" —திருக்குறள்.

புத்தகம்-சு 6	ரௌத்திரி ௵ கார்த்திகை ௴ நவம்பர் ௴ 1920	பகுதி-உ 2

திருமுருகாற்றுப்படை

[க.—திருப்பரங்குன்றம்]

(உ-ம் பக்கத் தொடர்ச்சி)

செருப் புகன்று எடுத்த சேண் உயர் நெடுங்கொடி
வரிப் புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில்
திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து
மாடம் மலி மருகில் கூடற் குடவயின்
இரும் சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த
முள் தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி எல் படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம் சிறை வண்டின் அரிக் கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன். அதா அன்று.

இஃது வீடு பெறுதற்குச் சமைந்த ஓர் இரவலனை வீடுபெற்றா னொருவன் முருகக்கடவுள் இடத்தே ஆற்றுப் படுத்தியதாக அம் முருகக் கடவுளை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடி யருளியது.

முருகக்கடவுளின் தோற்றம்

இம் மண்ணுலகத்தே தோன்றிய உயிர்கள் மகிழவும், காரிருளைப் போக்கிப் பேரொளியைப் பயக்கவும், பலவித கொள்கை கொண்ட சமயத்தார்கள் புகழவும், தன்னைக் கட்புலனால் நோக்குவார் தமக்குப் பச்சைப்பசேல் என்ற நிறத்தைத் தரவல்லதான கிழக்குக் கடலினிடத்தே நாள்தோறும் தோன்றும் இருளை காலையில் தோன்றி அழிப்பான் எழுஞ் செஞ்ஞாயிறே யனைய முருகக் கடவுளும் உயிர்களை மயக்குந் தன்மைத் தான மாயையை நாள்தோறும் தினகரனை யொப்ப அழித்து, உள்ளகக் கமலத்து உவப்புறச் செய்து, இப்பார் முழுதும் பரந்த பரப்பினை உடைய கட

வின் நிறத்திற் கொப்பான நிறைந்த பச்சை நிறந்தங்கிய விரிந்து ஆடுந் தோகையை உடைய மயில் மீதிவர்ந்து ஆறுமுகமும், பன்னிருகையும், சிவந்த திருமேனியும் விளங்கத் தோன்றுவார்.

அப்படிக் கிழக்குக் கடலினிடத்தே கண்ட செஞ்ஞாயிறு மாமேரு வெனும் பொன்மலையை வலமாகத் திரிதலைச் செய்யுமாறுபோல முருகவேளும் பதினான்கு லோகத்திலும் தன்னருட் கிரணங்களைச் செலுத்தி உயிர்களை உய்யச் செய்வார்.

முருகக்கடவுள் திருவுருவம்.

ஒழிவு இல்லாமல் தூரத்திலுஞ் சென்று இமைத்துப் பார்த்தற்குக் கருவியாக விளங்குகின்றதும், கட்புலனால் நோக்குவார் கண்ணிடங்கள் எல்லாவற்றினும் சென்று விளங்குகின்ற ஒளியினையும், தன்னைச் சரண் என்று சார்ந்தவர்கள் தீவினையைப் போக்கி அவரைத் தாங்கிய அறியாமையைப் போக்குதற்குக் கருவியாகிய வலியினையுமுடைய தாளினையும், அழித்தற்கு உரியாரை அழித்த இடியை மாறுபட்ட கையினையுமுடையவரும், மறக் கற்பில்லாத அறக் கற்பினையும் ஒளி பொருந்திய நுதலினையுமுடைய இந்திரன் மகளாரான தெய்வயானை நாயகிக்கு நாயகரான முருகக் கடவுள்.

முருகக்கடவுள் அணியும் மாலை.

கரிய கடலினிடத்தே முகந்ததால் உண்டாகிய நிறைந்த சூலினையும் மன்னுயிரைக்காக்கும் பெருமையையுமுடைய மேகங்கள் திங்களும், ஞாயிறும் இருளை நீக்கிச் சஞ்சரிக்கின்ற ஆகாயத்தினிடத்தே யிருந்து வளப்பத்தை உடைய மழைத்துளிகளை முற்படச் சிதறி கார் காலத்து முதல் முதலாகப் பெய்தலைச் சொரிந்ததால் குளிர்ச்சியையும் நல்ல வாசனையையும் உடைய காட்டிடத்து, இருள் உண்டாகத் தழைந்த பருத்த அடியினையுடைய செம்மையான கடம்பினது தேருருள்போன்ற மலர்களாற் கட்டப்பட்ட குளிர்ச்சியைத் தரத்தக்க மாலையானது அசைதலையுடைய மார்பினை உடையவனே. [ஆதலால் போகத்திற்கு உரிய தாராகிய இந்த செங்கடம்பின் பூமாலையை அணிந்த முருகவேள் எனவும்.]

அவர் இருப்பு.

அவர் இருப்பு பெரிய மூங்கில் வளர்வதும் தேவருலகுவரை உயர்ந்துள்ளதுமான திருப்பரங் குன்றம் என்னும் மலையில் கிண்கிணி எனும் சிறு சதங்கைகள் சூழ அந்தத்தால் ஒளி பொருந்திய சிறிய திருவடியினையும் திரண்ட காலையும், வளைந்த இடையினையும், மூங்கில் போன்ற தோளையும் இந்திரகோபம் போன்ற சாயத்திற் றோய்க்கப் படாமலே இயல்பாகவே சிவந்த நிறத்தால் அழகிய பூத் தொழிலினையுடைய ஆடையினையும், பல மணிகள் கோத்து ஏழு வடமாகிய மேகலையை அணிந்த அல்குலினையும், தெய்வமகளிர்களாகை யால் ஒருவர் கையாற் சிறப்பித்துப் பிறப்பியாத அழகைத் தமக்குத்தாமே இயல்பாகப் பெறுகின்ற அழகினையும், சாம்பூநதம் எனும் பொன்னாற் செய்த ஒளிபொருந்திய திரு ஆபரணங்களையும் வெகுதூரம் வரைக்கும் ஒளியை வீசுகின்ற குற்றமற்ற திருமேனியையும் உடையவர்களான சூரரமகளிர்கள் எல்லோரும் ஒன்றுகூடி அவர்கள் தங்கள் வாசனை மிகுந்த கொண்டையிலே சிவந்த தாளையுடைய சிறிய வெட்சிப்பூக்களுக்கு இடையே பசுமையான தாளையுடைய அழகு மிகுந்த குவளை இதழ்களைக் கிள்ளி ஒரு மாலையாகக் கட்டியும், சீதேவி எனும் தெய்வத்தன்மை பொருந்திய தலைக்கணியும் பூம் ஆபரணத்துடனே வலம்புரி வடிவாகச் செய்த தலைக் கோலத்தையும் வைத்தற்குரிய இடத்தே வைத்து அலங்கரித்து திலகம் இட்டு நறுமணங்கமழ்கின்ற அழகினையுடைய நெற்றியில் சுறுமீனெறுத்த அங்காந்த வாயாகப் பண்ணின தலைக்கு அலங்கரித்த ஆபரணத்தை தொங்கவைத்துச் சூட்டியும், வெட்சிமாலையையும் மற்றும் வேண்டும் பூண்களையும் குறைவற முற்றுஞ்சூட்டி குற்றமற்ற அழகான கொண்

டையிலே உருவத்தில பெரிய குளிர்ந்த சண்பகமலரைச் செருகி, கருத்த வெளியிதழையும் அழகிய உள் இதழையும், மருத மரத்தினது ஒளி பொருந்திய பூங் கொத்துக்களை அக் கொண்டையில் சூட்டி நீரிலிருந்து வெளித்தோன்றும்போது பச்சென்ற அரும்போடே வெளிப் போந்து சிவந்த இதழ்களோடே அழகு பெறச்செய்து நுண்ணிய ஆபரணங்கள் நிறைந்து தோன்றும் மார்பினிடத்து அசோகமரத்தினது அழகிய தளிரால் கட்டப்பட்ட மாலையானது அசைந்து நிற்கும், வயிரம் பொருந்திய சந்தனக் கட்டையில் உரைத்தெடுத்த சந்தனக் குழம்பை நறுமணம் வீசும் மருதம் பூவை அப்பினாற்போல கோங்கினது குவிந்த அரும்பையொத்த இளமையான அழகிய தனங்களிலே அந்த சந்தனக் குழம்பை அப்பி பெரிய இதழை உடைய வேங்கைப்பூவின் நுண்ணிய தாதையும் அந்த சந்தனக் குழம்பின் ஈரம் புலர்வதற்கு முன்னரே விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி தேவப் பெண்கள் தங்களுக் குள்ளே ஒருவர்க்கு ஒருவர் இந்தத்தளிரை எறிந்து முருகக்கடவுள் சன்னதியில் விளையாடுவார்கள். (தொடரும்)

கா. அ. நடேச செட்டியார்.

தமிழ்த்தாய் வணக்கம்

உலகம் தோன்றி நிலவிய பின்னர்
ஆரியம் என்னும் சீரிய பாழை
தன்னும் கருப்பையிற் றேற்று முன்னர்
பாரிடத் தனைவரும் ஓரிடத்திருக்கையில்
எல்லாம் வல்ல இறைவன் அருளால்
மனிதர் தங்கள் கனிதரு கருத்தை
ஒருவர்க் கொருவா தெரிவித் துய்ய
அருவமாத்திரையாய் அழகுறத்தோன்றி
நாடகமென்னும் ஏடகப் பேர்பெற்று
மணிமலை என்னும் அணிமலை மேரு
சூழ்ந்த நாடாம் எழ்குறிஞ்சி நாட்டில்
நிலவிய மக்கள்பால் உலவிய நங்காய்!
கூத்தெனும் செய்கையின் நாத்திறம்
[படப்பட
இயற்கை ஓசை வியன் செவி படவும்
புள்விலங்கோதை பொன் செவிபடவும்
புள்விலங்கிசைவழி தெள்ளுதங்கருத்தை
நடத்தல் என்னும் பிடித் கையுடன்
இசைக்கும் மனிதர்மிசைப்பால் அமலன்
திருவருளாலரு வுருவாய்த் தோன்றி
மனித கணங்களுக் கினிய பாழையாய்
இசைப் பெயர்தாங்கித் திசைப்பெயர்
கொண்டு
தென்ற லுலாவும் குன்றிலுலாவிய
தனக்கெதிரில்லா மனக்கசிவுள தாம்
தனித்தமிழ் என்னும் இனித்தசொல்
நங்காய்!
இயற்கை ஓசையை இசைக்க இசைக்க
இசைக்கும் கருவியாம் தசைபொதி
[நாவால்
பிறக்கும்ஓசைசெயற்கையாம்; பெரிதே;
இயற்கைசெயற்கைஇருதிறவோசையால்
கருணைக் கடவுள் கவினருள் பெற்று
அறிவுடைமாந்தர் நெறியுடன் வளர்க்க
மாந்தருக் கியல்பாய்ச் சேர்ந்துருக்
கொண்டதால்
இயல் எனும் பெயர்த்தாய், கயல்விழி
[நீயே!
அருவநிலையிலும்அருவுரு நிலையிலும்
மக்களுக்கின்பம் மிக்கவிளைத்ததும்
குறைவென்றெண்ணிநிறைசெயக்கருத,
"வேண்டுவார் வேண்டியாங் கியாண்டு
[மருள்செயும்"
முன்னவன் தானுநீ உன்னிய கருத்தை
முடிக்கவும், மனிதர்படிக்கவும், பரவவும்,
பதிபசுபாச மெனப்பகர் மூன்றின்
விதியறிந்துய்யவும், வேதாகமங்களை
நெறிப்படக்கிளக்கவும் நேர்ந்ததன்னுரு
[வாம்
அகரவுயிர் முதல் தோற்றத் தோன்றி
உருக்கொடுவந்து உலாவாநிற்ப

(தொடரும்)

துடிசைகிழார். அ. சிதம்பரனார்.

தமிழ்

தாப்புலிப்பா

ஆனைமுகன் அஞ்சலி

அமிழ்தினுமே இனியதென
அறை, தமிழின் சிறப்புரைப்பின்
தமிழ் மொழியைப் படுகிரியில்
தன்னொருகோட்டால் வரைந்தான்
தானடத்து நானென்னே.

தாப்புலிப்பா என்னும் பண்டைப் பாவினம் அகத்தியம் குமரம் முதலிய தமிழ் இலக்கணங்களுக்கு முந்திய காலத்ததாகிய "பேராற்று நெடுந் துறையன் பெருநூல்." என்னும் இலக்கணத்திலும் "இடைக்கழிச் செங்கோடன் இயனூல்" என்னும் இலக்கணத்திலும் உள்ளது.

இத்தாப்புலிப் பாவினாலேயே "செங் கோன் தரைச் செலவு" (The Expedition of Emperor Sengon)" என்ற நூல் யாக்கப்பட்டிருப்பதை ஒரு சிலர் அறிவர்.

தரைச்செலவு என்னும் நூலை தாப் புலிப் பாவினத்தாலேயே சொல்லல் வேண்டுமென்பது கட்டளை.

"தாப்புலி கொண்டு தரைச்செலல் சொல்ல" என்பது பேராற்று நெடுந் துறையன் பெருநூல் கண்ட விதி.

படுகிரி என்பது முன்பட்டுப் போன மேருகிரி. "முத்தமிழ் அடைவினை முற்படுகிரியினில் முற்பட எழுதிய முதல் வோனே"—திருப்புகழ்.

படுகிரி என்றது எற்றுக்கெனில் மேரு கடலில் அமிழ்ந்து விட்டபடியால். மேரு கிரியானது செங்கோன் காலம் வரை இருந்தது; சூரபதுமன் காலத்திலும் இருந்தது; சூரபதுமனுடைய இறுதிக் காலத்தில் அழிந்தது. குன்ற மெறிந்த குமரவேள் காலத்தில் அம்மேருகிரி இல்லையாயிற்று, சிலர்.

"சீதப்பனிக் கோட்டு மால் வரைமேற் பாரதப் போர் தீட்டும் தனிக்கோட்டு வாரணத்தின்றாள்"

என்ற பாடலுக்கு விநாயகக் கடவுள் மேருமலையில் பாரதத்தை எழுதினார் என்ற பொருள் விளங்கும்படி உரை யெழுதியுள்ளார்கள். இது சற்றும் பொருத்தமில்ல உரையாகும். குமரவேள் காலத்திலேயே அழிந்து போன மேரு மலையை பாரதகாலத்தில் இருந்தது எனக்கூறுவது எவ்வளவு பொருத்தம் எனப் பருங்கள்!.

"சீதப்பனிக் கோட்டு மால்வரை" என்பதற்கு "இமயம்" என்னும் பொருளே பொருத்த முடைத்து. இமம் என்றால் பனி. அதை விடுத்து வேறு பொருள் கூறுவது பொருந்தாது. உரை யாளர்கள் கவனிக்க.

துடிசைகிழார். அ. சிதம்பரனார்.

ரத்தினமாலை

BY L. SANKARAN B. A.

ஞானத்தைக் காண்பவனும் அறிவு பெறுபவனும் பாக்கியம் செய்தவர்கள். ஏனெனில் அவற்றின் வ்யாபாரம் வெள்ளி வியாபாரத்தை விட மேன்மை யானது. அவை கொடுக்கும் லாபம் பசும் பொன்னைவிட விலையுயர்ந்தது. நீ விரும்பக்கூடிய எதுவும் அவனுக்கு நிக ரல்ல. அவன் வழிகள் இன்பவழிகள். அவன் மார்க்கங்கள் சாந்தியையளிக் கும். அவனைக் கைப்பற்றுபவர்களுக்கு அவன் ஜீவவிருக்ஷமாகின்றான். அவனைக் கைவிடாதவர்கள் பெரும் ஸந்தோஷ மாயிருப்பார்கள்-பைபிள் பழமொழிகள்.

* * *

ஞானம் கைவசமாதல் உண்மையின் பத்துக்கு வழி—பார்பிர்.

ஞானம் புத்திமான்களுக்கு அரண். அது அவர்களை நகர பலிஷ்டர்களில் பதின்மரைவிடப் பத்திரமாய்ப் பாது காக்கிறது—எக்ளீஸியாஸ் டிக்ஸ்.

* * *

பலவிதமான ஞானத்தின் பலன் இன்பவாழ்க்கை ; ஞானாரம்பத்தின் பலன் வாழ்க்கைத் துன்பங்களை ஸஹித்தல்—ஸேனேகா.

* * *

ஆத்மாவுக்கு த்ருப்தியளிப்பது உலகத்தையாளும் ஞானமே.

* * *

தீவர்த்தியானது இருட்டறையிலுள்ள பொருள்களுக்கெல்லாம் ஒளி கொடுப்பதுபோல ஞானதீபம் தன்னை நோக்கு மனிதர் யாராயிருந்தாலும் அவர்களுக்கு ஒளி கொடுக்கிறது—சீன சமய நூல்.

* * *

அவன்மீது அன்பு செலுத்துகிறவர்கள் அவனை எளிதில் கண்டு பிடிக்கிறார்கள். அவனை ஆவலோடு தேடுகிறவர்களுக்கு அவன் தென்படுகிறான்--ஞானக்கோத்து.

* * *

"நீ என் ஸஹோதரி" என்று ஞானத்தினிடம் சொல். புத்தியை உன் நெருங்கின பந்துவாகக் கொண்டாடு—பைபிள் பழமொழிகள்.

ஞானம் உயர்ந்தது; மஹத்தானது. மனிதன் அதன் ஸேவையில் எவ்வளவு காலம் கழிப்பினும் தகும்—ஸேனேகா.

* * *

நாம் யார் என்பது உண்மையில் கண்டு பிடிப்பதும், அதை நன்குணர்வதுமே ஞானம்—பார்பிரி.

* * *

நமது அந்தராத்மாவைத் துணைக்கொள்ளுவதினாலும், ஒவ்வொரு மனிதனிடமும் ஸ்வபாவத்திற் புதைந்து கிடக்கும் தீர்க்கதரிசனத்துக்கு உட்படுதலினாலுமே ஞானத்தின் மர்மத்தையறிய முடியும்—எமர்ஸன்.

* * *

கற்றுக்கொள்வதற்கு உண்மையான ஆவல் எப்பொழுது உண்டாகிறதோ அப்பொழுது ஞானோதயமாகிறது. அதன் நியமங்களைக் கவனமாய் ஆராய்ந்து நோக்குதலே ஆத்மாவின் பரிசுத்தத்தை ஸ்தாபிப்பதற்கு வழி—ஞானக்கோத்து.

* * *

ஒளி படரும் உடையைத் தரித்துக் கொள்வது போல் நீ அவனை உடுத்திக் கொள்வாயாக. அவனை உன் தலைமீது இன்பமுடியாய்த் தரித்துக் கொள்வாயாக—பைபிள் எக்ளீஸியாஸ் டிக்ஸ்.

எல். சங்கரன், பி.ஏ.

கண்ணப்பரன்பு

BY V. SESHAGIRI SASTRY B. A.

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

2. மனப்பயிற்சி.

"தானே யிருநிலம் தாங்கிவிண்ணாய்நிற்கும்
தானே சுடுமங்கி ஞாயிறுந் திங்களும்
தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரைத் தண்கடலாகுமே"

எனத் திருமூலர், அகிலபுவன வடிவமாகப் பரந்து விளங்கும் எம்பெருமானது திருவடிவப் பொலிவை யோக நிஷ்டையின் வைபவத்திற் கண்டருளினர். மனங்குவிந்து, வெளிப் பிரபஞ்ச ஞானமற்று, நிஷ்களங்கமான சித்தத் தெளிவுடையவர்க்கு உத்தம நோக்கம் உண்டாவது அதிசயமன்று. அத்தகைய நிலைமை எத்தகையவர்க்கும் உண்டாகலாம். அதற்கு வயது வர்ண பேதம் என்பன தடையாகா. ஒருவனுக்குப் பரமஞான மடையக்கூடிய நிலைமை உண்டானபோது அவனுக்கு வயதென்ன? ஐயாட்டைப் பிராயமே அல்லவா?

தருமவியாதன் வருணத்தில் உயர்ந்தவனல்லவே? இவர் போல்வார் அனந்தம். எனவே ஜந்மசேஷ ஞானபக்வமாகிய உயிர்கள் பௌதிக உடலுள் தவழ்ந்து குலாவுங்காலத்து சித்தசுத்தியும், மனோலயமுமே அவற்றை மேனிலை அடையச் செய்வன. அத்தகைய கருவிகள் எவ்விடத்திலு முண்டாகலாம்.

முக்யமாக வேண்டியது அனுபவிக்கும் திறம். அது இல்லாவிட்டால் பேடி பெண்மைபெற விரும்புவது போலேயாகும். இவ்வனுபவத்திற் கெதுவும் சாதனமாகும். எம்பெருமானது வைபவப் பொலிவாக விளங்கும் இயற்கைப் பொலிவே பலரையும் சாந்த சமாதியடையச்செய்யும் சக்தி வாய்ந்திருப்பதென படித்தவர் பாமரர் யாவரும் அறிவர். முறிந்த மனம், பிணிபட்ட வாழ்க்கை, துஷ்டசித்தம், ஸம்ஸாரபந்தத்துள் சிக்கி அலையும் எண்ணம் இவற்றையெல்லாம் இல்லாதிருக்கச் செய்து, அவற்றை நினையாது மனத்தைத் தன் வயப்படுத்தும் இயற்கையின் பெருமை அளப்பதுஅஸாத்யம். அதனாலல்லவோ, முனிவர்களும் பெரியோர்களும் பரம்பொருளைத் தியானம் செய்ய மனோரம்யமான பிரதேசங்களை நாடி யங்கு தமது ஆச்ரமங்கள் கொண்டு விளங்கினர்.

ஆனால் கண்ணப்பர்க்கு அத்தகைய இடம் தேடாமலே அமைந்திருந்தது. அவரிருப்பிடமே மலைநாடு; அழகு பதிந்து, பச்சைப் பசும் போர்வை போர்த்து, தேன்சொட்ட, தெளிந்த நீர் குதித்தோடி அலைந்து விளையாடி, அலைகளை எழுப்பி எட்டிப்பார்த்து சிரித்துக் குதிக்கும் திருநாடு—அது அவரது சொந்த நாடு. அவரோ மறவர் குடியில் பிறந்த வீரமிகுந்து பயமற்றவர்; தவறென்று மறியாது, தமது முதுகுரவர் ஊட்டிய வழியே அக்குலத்தவர்க் கேற்பக் கற்றவர்; குற்றங் குடிகொள்ளா சிறு வயதினர்; அழகிற்பதியும் தண்நிலைமைவாய்ந்த இளமனங்கொண்டவர். எனவே, தேவராட்டிகளால் விற்பிடிக்கச் செய்த பிறகு, குலமரபுப்படி அவர் ஆசான் வீட்டிற்சென்று வில்வித்தையில்பயில நேர்ந்த காலங்களில் அவர் தமது கண் காதுகளை உபயோகித்திருந்தன ரல்லர்.

பலசமயங்களில் அவர் வில்லிலிருந்து அம்பு வெளியாக்கும் போதெல்லாம் அது அவ்வாறு ஓடியதென்று எண்ணுவர்; மனத்தின் காரணம் அறிந்திலரேனும், அதன் வேகத்தை அடக்கவும் ஒடுக்கவும் வெகு உத்ஸாகத்துடன் கற்றனர். அவ்வாறு கற்கும் போதே அவரது மனம் அதை எவ்விதம் விட்டால் அதனால்உண்டாகக் கூடிய கெடுதியைத் தடுத்து, பலத்தை விடாது அடக்கலா மென்பதிலேயே கவலையாக இருந்தனர். இவ்வாறு அவர் காடாரம்பங்களைக்கடந்து தமது மனோபாவப்படி பரிசோதனைகள்செய்யநேர்ந்தகாலங்களில், இயற்கையின் பொலிவைக்கண்டு அவரடைந்த ஆநந்த மிகையை இற்றெனச் சொல்வது முடியாது.

சிற்சில ஸமயங்களில் அவர் பொன்முகலியோரம் தமது வில்லும் கையுமாக வந்து, சுற்று முற்றுமுள்ள மலைப் பரப்பின் வைபவத்தைப் பார்த்துப்பிரமித்து நிற்பர்; அவ்வற்புத காட்சியைக் கண்டு மெய் மறந்து தமக்கும் தெரியாது தமது கைவில்லை நெகிழ விட்டிடுவர். தமக்குந் தெரியாமல் அங்குட்கார்ந்து கொண்டு எதிரிருந்த அந்த மலைக்காட்சியைக் கண்கொட்டாது கண்டு அண்ணாந்து பார்த்தவிதமே சிந்தை மயங்கிக் கிடப்பர். அப்போதவர் முன் யாராவது வந்திருந்தாலும், அவர் கட்புலத்துள் அவர்பட்டிருக்க முடியாது. அவர் உண்மையில் அப்போது காணாமலே கண்டு கொண்டிருந்தா ரென்பது தவறாகாது. பொன் முகலியாற்றங்கரையோரம் அலைத்து அவர் மேல் தெளிக்கும் நீர்த்திவலைகளின் சைத்யமும் அவரை தன்னுணர்ச்சி பெறச் செய்யொணாது; மேலெரிக்கும் உச்ச சூரியவெப்பமும் அவர் உடலில் உறைத்திடாது திகைக்கும். இவ்வாறவர், ஆநந்த மிகையால் மெய்மறந்து கிடப்பதைக் கண்டு அவரோடு பழகிவிளையாடிய காடன் நாணன் என்னும் இருவரும் இவர்க்குப் பேய்

பிடித்து நீட்டிவிட்டதென நினைப்பர். உண்மையில் திண்ணனார்—அந்த மரங்கள் தவழ்ந்த மலைக்காடுகள் வரவர கோபுரநிலையங்கள் போல உயர்ந்து காற்றுள் புதைவதை, அதை நீரருவிகள் தவழ்ந்த புனித நீரால் மாலைபிடுவது, மர இனங்கள் தேன்பெய்து மலரால் அருச்சித்து தமது வாசனைத் தூபமிட்டு தம்மைப்பற்றி யெண்ணாது பக்குவமான பழங்காய் முதலியவற்றை நிவேதனம் செய்வது;—இவற்றைக் கண்ணுற் காணாமல் இருக்கவில்லை. பூர்வ வாசனையால் அம்மரக்கூட்டங்களின் உத்தம குணங்கள் படிப்பென்ப தறியாத அவர் மனத்துள் ஊன்றி திடமாக வேர்கொள்ளலாயின. மற்றும் அளவற்ற வர்ணப் பொலிவொடு பரக்கும் தட்டாரப் பூச்சிகள்; தம்மைப்பற்றி எண்ணாது ஆநந்த மிகையால் பாடும் குயில் முதலிய பறவைக் கூட்டம் எழுப்பிய இனிய ஓசை; நெடு முயரத்திலிருந்து கனவேகமாக ஓடிவந்து பயமற்று கீழ்நிலை மேற்பாய்ந்து குதித்து வெள்ளிய பல்லாயிரம் திவலைகளாகமாறி ஆயிரக் கணக்கில் தம்மில் சூரிய பிம்பத்தை விளக்கி நடிக்கும் நீர்வீழ்ச்சிகள்; **கல்லையும் கரைத்து,** அடங்காதவற்றையும் அடக்கித் தன் வழிப்படுத்தி ஆனந்தம் பொங்கக் கரைபுரண்டு அலையெறிந்தோடும் பெரும் பிரவாஹங்கள்; இவற்றைக் கண்ட அவர் கண்கள் வேறெவற்றை நோக்க விரும்பும்? காற்று மோத ஒன்றோடொன்று உராய்ந்த மரவினங்கள் தமது துயரத்தை ஓலமிட்ட அந்த ஓசையே திண்ணனார் காதுள் நுழைந்ததேயன்றி நாணனும் காடனும் தட்டித்தட்டி எழுப்பியதை அவர் அறியார்.

இம்மாதிரி யவர் பன்முறையும் சுற்று முற்றும் அலையுங்காலங்களில் எல்லாம், இயற்கைப் பொலிவையும், சிருஷ்டி விசித்திரத்தையும் கண்டு அவற்றுள் பாய்ந்து மனமயங்கி லோக வாஞ்சையற்று விளங்குவது ஸஹஜம். ஆனால், அவ்வாறு அனுபவிக்க முடியாமையால் நாணனும் காடனும் அவருக்குச் சித்த சுவாதீனமில்லையென்றேயிருந்தார். ஆனால் தமது ஆண்டான் மகனென்னும் பயத்தால் தம்மெண்ணத்தை அவர் வெளியிட்டிலர்போலும்!

வி. சேஷகிரி சாஸ்திரி, பி. ஏ.

ஸத்ய ஸந்யாஸம்

BY M. S. SRINIVASA SARMA, M. A. (HONS.)

நமது புரதக்கண்டத்தின் உந்நதசரித்திரத்தில் யமுனா நதிக்கு இருக்கும் மஹாத்மியமும், ப்ரபாவமும் ப்ரபஞ்சத்திலுள்ள வேறு எந்த நதிக்கும் கிடையாது. கர்ணபரம்பரையாயும், இதிஹாஸ புராணங்கள் மூலமாயும் தொன்று தொட்டு வரும் கதைகளில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் திருவிளையாடல்களும் பால்ய சேஷ்டைகளும், மஹத்தான கார்யங்களும் நமது ஞாபகத்திற்கு வரும்பொழுது இயற்கையாகவே நம்மையு மறியாமல் யமுனையின் பெயர் நமது நினைவிற்கு வருகிறது. ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் ஸம்பந்தத்தைப் பெற்ற பாக்கியத்தினாலேயே யமுனைக்கு விசேஷமான ஒரு பரிசுத்தமும் தெய்வத்தன்மையும் உதித்திருக்கிறது.

மோச எண்ணமும் நாசக் கருத்தும் ஒருசிறிதுமின்றி மாசற்ற மனசுடன் உல்லாஸமாக சுகஜீவனம்புரியும் ஸன்மார்க்கரை வசீகரிக்கத்தக்க வண்ணம் ஒருநாள் மாலை ஸாயங்கால ஸூரியன் ஸ்வர்ணமயமாய் ஜ்வலித்துக் கொண்டிருந்தான். காண்பவர் கவனத்தைக் கவரும்படி யமுனையில் ஜலப்ரவாஹம் வெகு அழகாயும் கம்பீரமாயும் ஓடிக்

கொண்டிருந்தது. ஆற்றங்கரையில் வெள்ளிபோல் ப்ரகாசிக்கும் மணலின் மீது ஸ்ரீ கிருஷ்ணனும் ஸத்யபாமாவும் மிக்க மனோரம்யத்துடன் அதிக ஸந்தோஷகரமாய் ஸம்பாஷித்துக் கொண்டும் வேடிக்கையாக விளையாடிக்கொண்டும் மிகக் குதூஹலமாகக் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தனர். நல்ல மணத்தோடு கூடிய குளிர்ந்த மந்தமாருதம் அவர்களுடைய ஆநந்தத்தை அதிகரித்தது. அச்சமயத்தில் இனிமையான குரலுடன் பாடப்பட்ட வேதகோஷம் நமது ஸத்தியபாமாவின் காதில்விழவே அவள் மிக்கஆச்சர்யத்துடன் அதையே கவனித்தவளாய் செவி சாய்த்துக்கேட்டு அக்கீதத்தைச் சிறிதுநேரம் அநுபவித்துப் பின்னர் தனது ஒப்பற்ற நாயகனைப் பார்த்து, 'சகலவிஷயங்களையும் உணர்ந்த மஹாப்ரபோ! தேவ லோக வீணாகானம்போன்ற இந்தஅற்புதமான சங்கீதம் எங்கிருந்து வருகிறது? யார் பாடுகிறவர்?' என்று வினவினாள். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணன் "பிரிய சுந்தரி! அடுத்தவனத்தில் அழகிய பர்ணசாலையில் ஒரு சந்யாசி வசித்து வருகிறார்; அவர் அங்கு தபஸ்செய்து வருகிறார். இப்பொழுது நீ கேட்டு ஆநந்திக்கும் வேதஸங்கீதம் அவருடையதாகவே இருக்க வேண்டும்." என்று சொன்னார். அதைக் கேட்டதும் ஸத்யபாமா "ப்ராணேசா! பரந்தாமா! ஸர்வஸங்க பரித்யாகம் செய்து ஸம்ஸார பாதையினின்றும் விடுவித்துக்கொண்டு பயங்கரமான ஆரண்யத்தில் தனிமையாக இருந்து கடுந்தவம் புரியும் சாந்தமூர்த்திகளான ஸந்யாசிகளின் வாழ்க்கையே வாழ்க்கை! அவர்களே மனிதர்களுள் உத்தமமானவர்கள். நிஷ்களங்கிகளாய் மஹா புண்யசாலிகளான அவர்களுக் கன்றோ மோக்ஷம் ஸொந்தம். மனைவி மக்கள் மத்தியி லிருந்துகொண்டு ஸர்வ பாபங்களுக்கும் காரணபூதர்களா யிருக்கும் ஸம்ஸாரிகளுக்கு மோக்ஷம் எங்ஙனம் ஸித்திக்கும்? காஷாய வஸ்திரம் தரித்து மஹா அழகிய வனத்தில் வசித்து, ஸதா பகவந்நாம ஸங்கீர்த்தனம் புரியும் உத்தம ஸந்யாசிகளே தெய்வீகத்தன்மை பொருந்தியவர்கள்; அவர்களே பரிசுத்தர்கள்; அவர்களே புகழுக்கும் பூஜ்யதைக்கும் அர்ஹர்கள்; ஆகவே, ப்ராணபதீ! மிக்க மன நிம்மதியுடன் கவலை சிறிதுமின்றி, உபநிஷத் வாக்யங்களை அனுபவித்துக் கொண்டே பாடிவரும் துறவியினிடம் சென்று, அவரை தரிஸித்து வரலாமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது.' என்று ஸ்ரீகிருஷ்ணனை கட்டியணைத்துக்கொண்டு அமுத மொழிகளால் கூறினாள்.

சர்வாந்தர்யாமியாயும், சர்வஜ்ஞனாயும் விளங்கும் கிருஷ்ணன் சத்தியபாமையின் கரங்களைப் பற்றிக்கொண்டு "ஹ்ருதயேச்வரீ! உன்னுடைய எண்ணமே என்னுடைய எண்ணமும். உன் ஆசையை நிறைவேற்றுவதைக் காட்டிலும் எனக்கு வேறு என்ன வேலை இருக்கின்றது! உன் இஷ்டப்ரகாரமே நாம் இப்போது அந்த தபஸ்வியாரிடம் செல்வோம். நான் ஒரு கிழவேடனாக மாறி விடுகிறேன். நீ இப்போது இருப்பது போலவே சவுந்தர்ய நாயகியாக இரு. நாமிருவரும் அந்த சந்நியாசியிடம் சென்று இன்றுராத்திரி அவருடைய பர்ணசாலையில் தங்கியிருக்க அநுமதிக் கேட்போம். நான் அவரிடம் ஏதாவது பேசிக்கொண்டிருக்கும்பொழுது நீ நகைக்காமலும் பேசாமலுமிருக்கவேண்டும். அதன் பின் நடக்கும் சம்பவங்களை கவனித்துவா" என்று சொல்லி, சர்வ வல்லமையும் பொருந்திய கிருஷ்ணன் யாவரும் பிரமிக்கும்படி உண்மையான ஒரு கிழ வேடுவனாக மாறிவிட்டார். வெளுத்த மயிரும் கூன்முதுகும் எலும்பெடுத்த தேகமும், தளர்ந்த சரீரமும் பொருந்தி கையில் வில்லும், தோளில் அம்புறாத்தூணியும் இருக்க ஸத்யபாமாவுடன் நடந்து சென்றார் கபடநாடக ஸூத்ரதாரியான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி.

(தொடரும்.)

M. S. சீனிவாஸ ஸர்மா, M. A. (HONS).

திருக்குறள் நாடகம்

களவியல்

காலஞ்சென்ற மயிலை சீனி. கோவிந்தராசனவர்கள் எழுதியது.

1. சூத்தர்.

1. தலைமகன்:—அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்னும் ஆண் குணம் நான்கும் அமைந்த ஆடவன்.
2. தலைமகள்:—நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் பெண்குணம் நான்கும் பெற்றமடவரல். இவ் இருவரும் பிணி மூப்பு இறப்பு முதலிய துன்பங்கள் இல்லாமல் எந்நாளும் ஒருதன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலமும் குணமும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமை உடையவர்.
3. பாங்கன்:—தலைமகனுக்கு உயிர்த் தோழன்.
4. தோழி:—தலைமகளுக்கு உயிர்ப் பாங்கி.

2. களம்

கூட்டம் குறிஞ்சியிலும்; பிரிதல்பாலையிலும்; இல்லிருத்தல் முல்லையிலும்; இரங்கல் நெய்தலிலும்; ஊடியும் கூடியும் இன்பம் உண்ணல் மருதத்திலும் நிகழ்கின்றன.

3. காலம்.

கூதிர், கார், முன் பனி, பின் பனி, இளவேனில், முதுவேனில் என்னும் அறுவகைப் பெரும்பொழுதும்; யாமம், விடியல், காலை, நண்பகல், மாலை என்னும் ஐவகைசிறுபொழுதும்விரவிய காலம்.

களவியல்

களவாவது தலைமகனும் தலைமகளும் காதல்கொண்டு கலத்தல்.

முதலாம் நாள்.

1. இயற்கைப் புணர்ச்சி.

களம்:—குறிஞ்சியில் ஒரு பொழில்.
காலம்:—கூதிரில் ஒரு யாமம்.
கூத்தர்:—தலைமகன், தலைமகள்.

[தன்னைத் தோழியர் பலரும் சூழ்ந்துவர, தலைமகள் தன்னில்லத்தை விட்டுப் பொழிலிடம் புகுந்தாள். அங்கே, பொழில் விளையாட்டு விருப்பினால், தோழியர் எல்லாம் நீங்கிச் சென்றார். செல்லவே, அதனிடத்தே தனியே நிற்கின்றாள் தலைமகள். தலைமகனும் தன்னைப் பற்பல தோழரும் சூழ்ந்துவர, குறிஞ்சியில் வேட்டையாட வந்தான். அங்கே வேட்டை விருப்பினால் தோழர் எல்லாம் நீங்கிச்சென்றனர். செல்லவே, தலைமகனும் தனியனாய் அவ்விடத்தே வந்து, தனியளாய் நின்ற தலைமகளைக் கண்ணுறுகின்றான். கண்ணுற்று, அவள் வனப்பு தன்னை வருத்துகின்ற வகையை வகுத்துச் சொல்லுகின்றான்.]

தலைவன் :—(அவள் உருவு முதலியன முன் கண்டறியாத சிறப்புடையனவாகக் காணப்படுகின்ற படியால், அவளை ஐயுற்று) "ஆ! இக் கனவிய குழையை யுடையாள் யாரோ? இவள் எழுதலாகா உருவம் என்னை வருத்துகின்றதே! இவள்,—இவள், இச் சோலையில் வசிக்கின்ற ஒரு தெய்வமகளோ? அல்லது இக்காவில் நிற்றலாலும் மயில் போலும் சாயல் உடைமையாலும் ஒரு மயில் விசேடமோ? அல்லது, ஒரு மானிட மாதரோ? இவளை யாரெனத் துணியாமல், அந்தோ! என் மனம் மயங்குகின்றதே! — இல்லை. இவள் ஒரு மானிடப் பெண்ணே ஆதல் வேண்டும். அல்லளாயின், என் உள்ளம் அங்கே ஓடுமோ? அவளும் எதிர் நோக்குவாளோ? 1081.

(மானுட மாதரெனத் தெளிந்து, அவள் நோக்கினால் வருந்தி) "ஆ! என்ன அழகு! இவ்வகையான அழகினை உடையாள், தன்னுடைய அழகால் என்னை வருத்துவதே போதாதா? மேலும், குறிப்பு நோக்காலும் வருத்துகின்றாளே! இதுவும் வேண்டுமா? அந்தோ! இவள் என் நோக்

கத்திற்கு எதிர் நோக்குதல், தானே தாக்கி வருத்துவதோர் அணங்கு, தாக்குவதற்குப் படையையும் கொண்டு வந்தாற்போல அல்லவோ உள்ளது? இதற்கு என்செய்வேன்! 1082.

"ஆமாம்! இவள் தன்னுடைய அழகாலும் குணத்தாலும் எனக்கு இன்பமும் விளைக்கின்றாள்! அந்த இன்பத்தைக் காட்டிலும் மிகுதியாகத் துன்பமும் விளைக்கின்றாள். இதனால் இவள் நாலோர் சொல்லும் கூற்றமோ?—கூற்றத்தை முன்னெல்லாம் கேட்டே அறிந்தேன். அதைக் கண்டறியேன். இப்பொழுது அதைக் கண்டும் அறிந்தேன்! ஆம்; அது நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற்குணங்களுடனே பெரியவும் போர் செய்தலுமுடைய கண்களை உடையதாய் அதோ! நிற்கின்றது 1083

"ஆ! இவள் எவ்வளவு பெண்தகை உடையாள்! எவ்வளவு பேதமை உடையாள்! ஆயினும், இவள் கண்கள் மட்டும் இவ்வளவு கொடியனவாக இருக்கின்றன, ஏனோ? அந்தோ! இவள் குணங்களுக்கும் அழகிற்கும்—பேதைமைக்கும் இக் கண்கள் தகுமா? இவை, தம்மைக் கண்டாரது உயிரை உண்ணும் தோற்றத்துடனே கூடி இவளுக்கு மாறுபடுகின்றனவே! 1084.

"என்னே இந்த மடந்தையின் கண்கள் இன்பமும் துன்பமும் இரண்டையும் செய்கின்றன!—என்னை வருத்துதல் உடைமையால் கூற்றமோ? என்மேல் ஓடுதல் உடைமையால் கண்தானோ? இயல்பாக வெருவுதல் உடைமையால் பெண்மானோ? அறிகின்றிலேன். இவள் கண்களின் நோக்கம் இந்த மூன்று தன்மையும் முதிர்ந்துடையன! கண்டாய்! 1085.

"அந்தக் கொடும் புருவங்கள் விலக்கின வாயின், அவற்றைக் கடந்து, இவள் கண்கள் எனக்குத் துயரைச் செய்யுமோ?—நான் நடுங்குதற்கு ஏதுவாகிய துயரைச் செய்யுமோ? செய்யமாட்டா. இவள் கண்களுக்கு பிரியா நட்பா யிருப்பன அப்புருவங்களே! இருந்தும் பயன் என்ன? இயல்பாகவே கோடுதலுடைய புருவங்கள்!—செம்மைக் குணம் இல்லாத புருவங்கள்! அவைகளோ இக் கண்களைத் திருத்தமுடியும்? தமது நண்பரைக் குற்றத்திலிருந்து திருத்த விரும்புவோர், தாமும் குற்றமில்லாத குணமுடையராய் இருத்தல் வேண்டாமா? தாமே குற்றமுடையாரானால், பிறரை எப்படித் திருத்த முடியும்? 1086

(அவள் தோள் வனப்பினால் வருந்தி) ஐயோ! இம்மாதருடைய தோள்களின் வெம்மையும் பெருமையும், எத்தனை! அவற்றின் ஆற்றல் எத்தனை!—சாயாத் தோள்கள்!—அவற்றின்மேல் இட்ட துகிலே, அவை என்னைக் கொல்லாமல் காக்கின்றது. கண்ணை மறைத்துத் தடுக்கின்றது. அதுவே கொல்வதாகிய மதயானையின்மேல் இட்ட முகபடாத்தினை ஒத்திருக்கின்றது! அத் துகில் சிறிது மறைக்காவிட்டால், தோள்கள் என்னைக் கொன்றேவிடாவோ? 1087.

(அவள் நெற்றி வனப்பினால் வருந்தி) "அது கிடக்கட்டும். என் பெருவலியெல்லாம் இவள் சிறு நுதலுக்கே தோற்றதே! ஓ! என்ன வியப்பு! எனக்கு நேராத பகைவரும் போர்க்களத்தே வந்தபின் என் வலியை நேர்ந்தார் வாயிலே கேட்டு அஞ்சுவாரே! அப்படி அஞ்சுதற்கு ஏதுவாகிய என் மன வலியும் காய வலியும் எல்லாம் இவள் ஒள்ளிய நெற்றி ஒன்றிற்கே உடைந்தனவே! முழுதும் அழிந்துவிட்டதே! இது என்ன வியப்பு! 1088.

(அவள் அணிவனப்பினால் வருந்தி) "ஐயோ! இவளுக்கு ஏனோ இந்தப் பூணெல்லாம் வீணே பூட்டினர்? வெளியே, இவள் பெண் மானைப் போன்ற மடநோக்கினை—மருண்ட நோக்கினை உடையாள். உள்ளே, நாணம் என்னும் நற்குணத்தையும் உடையாள். (தொடரும்.)

பெருந்தேவனார் பாரதம்

(21-ம் பக்கத் தொடர்ச்சி.)

வரை என்பது கணுவின் பெயர். சினையாகு பெயராய் மூங்கிலையுணர்த்த, அது தானியாகு பெயராய் மலையை உணர்த்திற்று. இஃது இருமடியாகுபெயர். இது பாரதப்போர் தீட்டும் என்ற குறிப்பால் மேருமலையை யுணர்த்திற்று.

பாரதப்போர் தீட்டும் என்றதற்குப் பாரதத்திற் சொல்லப்படும் போரைத் தீட்டிய என்று கூறின் அங்ஙனம் விநாயகர் எழுதியது பாரதத்திற் கூறப்பட்ட போர்ச்செய்தியை மாத்திரமே என்று பொருள்படும். பாரதமாகிய போர்ச்செய்தியைஎன்று கூறின்பாரதம் போர்ச்செய்தி ஒன்றையே கூறுவதாம் என்று பொருள்படும்; ஆதலின், அக்குற்றங்கள் நீங்குதற் பொருட்டுப் பாரதம் போர் என்றதனைப் போர்ப் பாரதம் என முன்பின்னாக மாற்றிப்போர்ச்செய்தியை முதன்மையாகக்கொண்ட பாரதத்தை எழுதிய என்று பொருள்கூறப்பட்டது. போர் என்பது பொரு என்னு முதனிலை திரிந்த தொழிற்பெயர். வாரணம்-யானை. அது முதலாகுபெயராகி, யானைமுகத்தை யுணர்த்த, அது சினையாகு பெயராய், யானைமுகத்தினையுடைய விநாயகக் கடவுளை உணர்த்திற்று. தனிக்கோடு உரிச்சொற்றொடர்.

ஒரு காரியத்தைச் செய்யுங்காற் பல இடையூறுகள்உளவாதல்உலகத்தியல்பு; அங்ஙனம் இடையூறுகள் உளவாதற்குக் காரணம் அவர்களது முன்னைத் தீவினையே. அது நீங்கின், அதன் காரியமாகிய இடையூறுகள் தாமே நீங்கிவிடும் என்பது கருதி "வாரணத்தின்றாள் ஓத வினைபகலும்" என்றார். வினை என்பது நல்வினை, தீவினை என்னும் இரண்டனையும் உணர்த்துமேனும், ஈண்டுத் தீவினையை உணர்த்தி நின்றதென்க.

அவ்விடையூறுகள் நீங்கவே எடுத்துக்கொண்ட காரியத்தை நன்கு முடித்து உலகில் நிலைத்திருத்தற்குரிய புகழைப் பெறுதலோடு இம்மைக் கண்ணும், மறுமைக்கண்ணும் தாம் விரும்பும் பொருள்கள் யாவற்றையும் பெறுவராதலின் "காதற் பொருளனைத்துங் கைகூடும்" என்றார்.

அனைத்தும் என்பதில் அத்தனை என்பதன் விகாரமாகிய அனை-பகுதி, த்-சந்தி, து-ஒன்றன் படர்க்கைவிகுதி. அனைத்தும் என்பது பன்மைப் பொருளை உணர்த்தலால், இதில் வந்த துவ்விகுதி பன்மையில் ஒருமை வந்த வழுவமைதி.

கலைமகள் வணக்கம்.

புத்தகமு ஞானத்து முத்திரையும் பொற்
பளிங்கும், வைத்த கமண்டலமும் வன்னி
கையு--முத், துவடங் கொண்ட மார்பினாள்
வந்தென் மனத்தே இடங்கொண்டா
ணீங்கிற் றிடர்.

(ப-ரை.) முத்து-முத்துகளாலாகிய,, வடங் கொண்ட-மாலையை அணிந்த மார்பினாள் - மார்பையுடையவளாகிய கலைமகள், புத்தகமும்-சுவடியையும், ஞானத்து முத்திரையும்-ஞானத்தைக் குறிக்கும் முத்திரையையும்(ஞான முத்திரையையும்),பொன்-அழகாகிய, பளிங்கும்-பளிங்குக் கற்களாலாகிய மாலையையும்,வைத்தகமண்டலமும்-(நீர்வார்த்து) வைத்த கமண்டலத்தையும், வன்னிகையும்-வீணையையும் (நான்கு கைகளிலு முடையளாய்), என் மனத்து வந்து-(தனக் கடியவனாகிய) என்னுடைய மனத்தின் கண் எழுந்தருளி, இடங்கொண்டாள்—(அதனைத் தனக்கு) இடமாகக் கொண்டாள், (அதனால்) இடர்-என்னுடைய துன்பம், நீங்கிற்று-ஒழிந்து விட்டது, (எ - று)

(தொடரும்.)

கா. ர. கோவிந்தராஜ முதலியார்,

பச்சையப்பன்காலேஜ், தமிழ்ப்பண்டிதர்.

தனித் தமிழ்ப் பகுதி

தமிழின் நிலைமை

படைப்புப் பலவற்றுள் மக்கட் படைப்பினும் பயனுடைத்து மற்றுண்டோ? என்னை? படைப்பானாய பயன் எம்மையாளுடைய இறைவனை இரண்டறக் கலத்தற்காம் ஒப்புமை கடந்த வீட்டுப் பேற்றைப் பெறுவதே யன்றோ? படைப்புக் குற்றதாய வழி வழித் தொடரும் பண்டைவினை யெவற்றையும் கழித்தற்கும், அறம் பொருள் இன்பமாம் முப்பேற்றினையும் முரணாதடைதற்கும், வீடுறுதற்குரிய நெறிமுறையே ஒழுகுதற்கும் ஏற்ற கருவியா யமைந்துளது மக்கட் படைப்பன்றி வேறெவன்?

இம்மக்கட் படைப்பினுள்ளும் சிறப்பாகக் குறிக்கப் பெறுவார் ஆறறிவுமான்றவரே. ஏனையோர் பகுத்தறியு உள்ளுணர்ச்சியிருந்தும் கொள்விலக்காய்ந்து நன்னெறிச் செலும் பேராற்றல் இலராயின் ஐம்பொறி வயத்தராய் எளிதிற்றாங்காணும் தீ நெறிக் கண்ணே திடமுறவுழன்று தீ நரகுக்குக் கருவியாய வெல்லாந் தவிராதியற்றி வாளாபோவர். இவர் மக்களெனற் குரியரல்லர். இதனானன்றோ நந்தம் தமிழ் நாட்டில் தோணி புரத்தின்கண் 'காப்பியக்குடி' யென்னு மூரில் 'காப்பியத் தொல்குடி-கவின்பெறத் தோன்றிய' தொல்காப்பியனாரும் 'மாவு மாக்களு மையறிவினவே' 'மக்கடாமே யாறறிவுயிரே' எனக் கூறிப்போந்தனர்.

அற்றாயின் ஆறறிவும் சான்ற சிரியர் என்பார் யாவரெனின், ஆன்ற நற்கல்வியறிவொழுக்கங்களிற் சான்றாராய்த் தந்தாய் மொழிமாட்டும் தாய் நாட்டிடத்தும் பற்றுள்ள முடையாராய்த் தாங் கற்றதனாலாம் பயனும் கடவுள் வழிபாட்டிற் சிறந்தாராய், அருளும் பொறையும் அமைந்தாராய்த் தம்மொழியும் நாடும் மக்களும் மேலுமேலுஞ் சிறத்தற்கான நறுஞ்செய லெவையும் கைம்மாறு கருதாது கவின்பெறவியற்றி நேரிய முறையுடன் வாழுமவரே யென்க. ஈண்டு, 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே; வகை தெரிவான் கட்டேயுலகு' எனப்போந்த பெரியாருரை உணரக்கடவது.

அரிதினும் அரிய மக்கட் படைப்பைப் பெற்றும் வினைவயத்தால் மாக்களாய்த் திரிவோர் மக்கட்டன்மை யெய்தல் கூடாதோவெனின்? கல்வியறிவொழுக்கங்களிற் கைவந்த சான்றாரிடத்துப் பழகி அவர்வழி பேணி அடையத் தகுவதெதையும் அடைந்துகொள்விலக்கறியு உள்ளுணர்வெய்தின் கூடும் என்க.

இதனானே மக்கள் இருவகையினரென்பதும், அவருள் ஆறறிவுமான்றவரே மக்களெனற் குரியரென்பதும், ஐம்பொறியுணர்வு மட்டுமுள்ளோர் மாக்களெனற்குரியரென்பதும், மாக்களின் இயல்புடையார் மக்களால் திருந்துதல் கூடுமென்பதும், அது மட்டுமன்றித் தம்மொழியும் நாடுஞ் சிறத்தற் கமைந்தன புரிதலும் மக்கள் தம் அருங்கடனென்பதும் பெற்றாம்.

மக்களும் நாடுஞ் சிறத்தற்குத் தலை

யாயது மொழியே. மொழி போற்றுநர் அருகிச் சிறுமையுறின் மக்களும் நாடுஞ் சிறத்தலில்லை. இது ஒன்றினொன்று பற்றிநிற்கும் இயல்புடைத்தாகிறது.

அற்றாயின், ஈண்டு நந்தமிழுலகம் உள்ளவாறு ஒரு சிறிது அறிவாம். நந்தமிழுலகம், தமிழ்மக்கள், தமிழ்மொழி இற்றைக் காலமெனக் கழறவொண்ணா அற்றைக் காலத்தே நிலவிச்சிறந்த சிறப்பென்னை? இற்றைநாள் இழிந்துள்ள இழிவென்னை? இன்று நந்தமிழ் மக்கள் ஒரு சிறு சொற்றொடரேனும் பிறமொழிக் கலப்பின்றிப் பேசவும் வரையவும் வல்லரோ? தம்மன்னையர் முலைப்பாலுடன் ஊட்டியது தமிழன்றோ? தம் மழலைப் பருவத்தே பெற்றோர் களிக்கக் கழறியதும் தமிழன்றோ? இளமையிற்றாங்கற்ற ஆத்திசூடி, நல்வழி முதலிய அறச்சுவடிகளும் தூயதமிழன்றோ? தம் மருங் காதற்கிழத்தியரோடு கூடிக் குலாவுவதும் தமிழன்றோ? அவரோடு ஊடலுற்று உரையாடுவதும் தமிழன்றோ? தம்மக்கள் மழலையும் தண்டமிழன்றோ? ஈண்டெல்லாந் தமிழ்மொழி தனித்தியங்குவதோ இல்லையோ? ஈண்டெல்லாந் தனித்தியங்குந் தமிழ்மொழி பின் கலப்புறுதலெற்றுக்கோ? உடலுயிரோம்புதற்காம் முயற்சியிற்றலைப்படு நாளில்மட்டும் தமிழ்மொழி பயன்படுவதில்லை போலும்! நன்று நன்றீது! உண்டுவளர்ந்த காலையில் முற்றுந் துணைநின்ற ஒருமொழி உலக நடையில் இறங்கியஞான்று உதவியற்றதாயிற்றெனின் எவரும் நகையே செய்வர்! இன்று, இற்றை ஞான்றுள்ள தமிழ் மக்களுக்குத் தம் வாணாட்களில் துணையுடையதாய்ப் பயனுடையதாய்ச் சிறப்புடையதாய்க் காணமாட்டாத நம் தமிழ் மொழி பலநூற்றாண்டுகளுக்கு முந்தியகாலத்தில் மற்றென்னாட்டினருஞ் சிறப்பின்றிக் கிடந்த பண்டைக்காலத்தில், எம்மொழிக்கும் மொழி கொடுத்துத் துணைநின்ற மிகமிகப் பழையகாலத்தில் தன்னிற்றானாய் தனித்தியங்கித்தமிழ் நிலத்தைப் பெருமைப்படுத்தியது உண்மையன்றோ? பல்லாயிரங்காவதம் நிலப்பரப்பினும் நிலவிநின்ற மக்களுக்குப் பயன்பெற நின்றது நந் தமிழன்றோ? பண்டைத் தமிழ் மக்களும் சிறப்புற்றது அதனானன்றே? இன்றுள்ள நாமும் அவர் வழி வந்தவர்தாமே? நாம் பிறந்ததும் வளர்ந்ததும் இன்பதுன்பந் துய்ப்பதும் தமிழ் நிலந்தானே? அங்ஙனமாக நமக்கு மட்டும் அம்மொழி துணையற்றதாயின் அது எவ்வகையில்? நிலம் இதுகாறும் மாறுபட்டதெனக் கூறுமாறுண்டோ? ஒருவாறு அளவில் குறைந்ததெனினும் இன்றும் என்றும் தமிழ்நிலம் கூறக்கிடக்கிறது உண்மையன்றோ? மொழிதானும் மாறுபடவுமில்லை; மாறுபடப்போவதுமில்லை. பல்லாயிரவாண்டுகளாக நாம் அதனை மாறுபடுத்த முயல்கின்றோமன்றி அம்முயற்சியில் நாம் வெற்றி பெறுவோமில்லை. என்னை! இயற்கையமைப்பை யழித்தற்கும் மக்கள் முயற்சியால் கூடுவதோ?

இன்று ஆடவரே தண்டமிழ்தன்னைத் தனித்தாளவல்லாரல்லர். ஆயின் ஆண்டு பெண்டிரும் கல்வியிற் சிறந்து தமிழ்த் தேறலும் பருகினர். அற்றை நாளில் ஆண்மகாரேயன்றிப் புலமையின் மிக்க பெண்மகாரும் கற்றாரவையிற் கவினுற விளங்கினர். அப்பெண்ணரசியர் யாத்த பாக்களையும் அவற்றின் சுவையினையும் நாம் ஏற்பதுண்டெனினும் இன்றும் அவையிற்றின் சொல்லமைதி பொருளமைதி முதலிய அணிகளை அளவை காண்டலும் ஆமோ? அத்தகைப் பெண்மணிகளை யீன்றளித்ததும் நம் தமிழ் நிலமன்றோ? அற்றைப் போதன்றோ கிரேக்கர் முதலாய மேனாட்டவர் எவர்க்கும் அவர் வேண்டிய வேண்டியாங்குத் தமிழ் நிலம் தமிழ்ப் பண்டங்களைக் கொடுத்துத் துணைநின்றது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பிறரெவர்க்கும் உண்ண உணவும் உடுக்க வுடையும் செழிக்கச் செல்வமும் வரையாதளித்தது தமிழ் நிலமன்றோ? அற்றைஞான்று நம் தமிழ்நாடு இயற்கைப் பெருவளம் முற்றப்பெருகியிருந்ததோடு மக்களும் தம்வாழ்க்கை நலங்களுக்கு இன்றி

யமையாதசெயற்கைப்பொருளெவையும் பிறர் துணையின்றித் தாமே ஆக்கியும் இன் பநுகரவும் பிறர்க்கிடவும் திறமுற்றிருந்த னரென்பதை மறுத்தல் கூடுமோ?

வேயா மாடமும் வியன்கல விருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பும்
வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணறுஞ் சாந்
பூவும் புகையும் மேவிய விரையும் [தமும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினு மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
ஆரமு மகிலுந் தூசுந் துகிரு
மாசறு முத்து மணியும் பொன்னும் [யறியா
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வானவர் பன்னிண விலைஞரோ
டோசுநர் செறிந்த வூன்மலி யிருக்கையும்
கஞ்ச காரருஞ் செம்பு செய்குநரு
மரங்கொறச்சருங் கருங்கைக் கொல்லரும்
பொன்செய் கொல்லரு நன்கலந் தருநரும்
துன்னகாரருந் தோலின் றுன்னரும் [க்கிப்
கிழியினுங் கிடையினுந் தொழில்பல பெரு
பழுதில்செய்வினைப் பால்கெழு மாக்களுங்
குழலினும் யாழினுங் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டு [யுஞ்
மரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கை
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கு மருவூர்ப் பாக்கமும்"

எனவருஞ் சிலப்பதிகாரக் கூற்று பண்டைத் தமிழ் நிலத்தின் நலத்தை எத்துணை அழகிதாய் வலியுறுத்துகின் றது. இதனை நாம் ஒருசிறிதேனும் உற் றுணர்வ துண்டோ?

"தமிழ் வளர்ந்து உன்னத நிலையி லிருந்த அஞ்ஞான்று; அவர் உண்டதும் தமதுணவே, அவருடுத்ததுந் தமதா டையே, அவர் வாழ்ந்ததும் தமது மாளி கையே, அவரணிந்ததும் தமது பொன்னே, அவரேறியதும் தமதிர தமே, அவர் பூசியதும் தமது வாசமே, அவரிருந்ததும் தமது நாடே, அவ ராண்டதும் தமதரசே, அவர் சேவித் ததும் தமதரசே, அவரோடியதும் தங் கடலே, அவரோட்டியதும் தம் மரக் கலமே, அவர் வழிபட்டதும் தங்கட வுளே, அவர் கும்பிட்டதும் தம் பெரி யாரையே, அவர் பேசியதும் தம் மொழியே, அவரோதியதும் தமது நூலே" என அறிஞர் ஆ. முத்துத்தம்பி பிள்ளை அவர்கள் கூறியுள்ள அழகிய மொழிகள் உண்மையே உணர்த்துவன வன்றோ?

நம்தமிழ்மகார், நம் தமிழ் நிலம், நம் தமிழ்மொழி பண்டைநாட் பெற்றுத் தலை சிறந்த எல்லையில் எழினலங்கள் இன்றெங்கே? ஒரு சின்னஞ் சிறு பங் கேனும் இன்றுள தெனல் கூடுமோ? தண்டமிழ் தன்னிற்றனுப் தனித்திய ங்கிப் பெருமைதந்த காலத்தில், நற்ற மிழ்தன்னை நயந்து போற்றிய நல்லறி வாளர் நிலவிய காலத்தில், நம் தமிழ் நிலம் நல்கிய நலங்கிளர் செல்வம் இன் றெங்கே? அதன் அடிச் சுவட்டைக் காணுமாறு முண்டோ?

ஆசறு மொழியின் அருமை அறிவார் அறுகிய காலத்தில்,—எல்லையில் எழி னலம் எத்துணை என்னணம் என எண் ணுவார் எண் உளரோ? வென்று ஐயுறு நாளில்,—முடிவில் அழகிய மொழி தனைப் போற்றுநர் குறுகிய ஞான்றில்-- பண்டைப் பெருநலம் பெறுவது முண் டோ? சிறுமையே சிறப்பதாயிற்று! "வசையிலா, வண்பயன் குன்று மிசை யிலா, யாக்கை பொறுத்த நிலம்" என் பது பொய்யா மொழி அன்றோ!

இற்றைப்போது நாட்டின் நலம், பிறப்புரிமை முதலிய கோரி பல்லோர் பல்லாற்றான் முயல்வு செலுத்து கின்ற னர். மொழியாளர் பலரும் தத்தம் மொழியின் ஆக்கங் கோரி ஊக்கங் கொண்டு உழைக்காமலில்லை. என்னே! தமிழ் அணங்கின் பொல்லாப் பெரு ஊழ்! தமிழ்தஞ் சிறுமை உணர்ந்து உறுவகைபுரிய உழைக்குநர் உண்டோ? தமிழ்நிலத்தின் நலங்கோரி உழைக்குநர் எவரும் மொழிநலமின்றித் தம் உழை ப்பு பயன்றரா தென்பதை உன்னுவா ராக.

சி. மு. நடேசன்.

'கோகழி' உண்மை

அன்றிக் குயிற்பத்தில்,

"இன்பந்தருவன் குயிலே
யேழுலகும் முழுதாளி
யன்பனமுதளித் தூறு மானந்தன்
வான் வந்த தேவன்
நன்பொன்மணிச்சுவடொத்த
நற்பரிமேல் வருவானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே
கோகழி நாதனைக் கூவாய்."

என்னு மிச்செய்யுளில், 'வான் வந்த தேவன்' என்பதற்குப் பெரியானுலகத்தினின்றும் (சிவலோகத்தினின்றும்) எழுந்தருளி வந்த கடவுள் எனப் பொருள் கொள்ளுதலின், அவ்வான் (சிவலோகம்) எனக்கிடக்க, அதனுடன், 'கோகழிநாதனைக் கூவாய்' எனப் புகன்றிருத்தலின், அக்கோகழி இவர் கூறிய (பெரியானுலகம்) சிவலோகமாகாதெனக் கொள்வ ரதைக்காணும் பெரியோர்.

அன்றி, நம்மணிமொழிப் பெருமானார் திருக்கோவையாரில் 'சங்கந்தரு' என்னுஞ் செய்யுளில்,

'யாம்பெறவான்கழி தான்கெழுமி' என்றார்.

இதை இயல்பாக்கொண்டால் 'வான்கழி' எனவும்; உடம்படு மெய் பெற்றதாக்கொண்டால் 'ஆன்கழி' எனவும் கொள்ளலாம். ஆனால், பேராசிரியர் இயல்பாக்கொண்டு 'வான்கழி' எனச் சிதைத்தார்.

ஆயின், இச்செய்யுள் எண்வகைத் தாங் குறை நயப்புக்கூறலின் நான்காவதொன்றான 'அறியாள் போன்று குறியாள் கூறல்' எனுந்தலைவி கூற்றென்ப. இது,

" குறிப்பறிதலோடு மென்மொழி கூறல்
விரவிக்கூற லறியாள் போறல்
வஞ்சித் துரைத்தல் புலந்து கூறல்
வன்மொழி கூறல் மனத்தொடுநேர்தல்
சொன்னவிரு நான்குந்துறைகுறை [நயப்பென
மன்னியபொருளில் வகுத்திசினோரே"

என்பதாலறியக் கிடக்கின்றது.

இக்குறை நயப்புக் கூறற்றுறைகளில்:

க. குறிப்பறிதலென்பது:—தலைமகனது குறைகூறத்துணியா நின்றதோழி, தெற்றெனக் கூறுவேனாயின், இவள் இதனை மறுக்கவுங் கூடுமென வுட்கொண்டு நம்புனத்தின்கட் சேயினது வடிவுடையராய்ச்சினவேலேந்தி ஒருவர் பலகாலும் வாரா நின்றார், வந்து நின்று ஒன்று சொல்லுவதுஞ் செய்கின்றிலர். அவரிடத்து யாஞ் செய்யத்தக்க தியாதெனத் தான் அறியாதாள் போலத் தலைமகளோடு உசாவி அவள் நினைவறியா நிற்றல்.

உ. மென்மொழி கூறலென்பது :—நினைவறிந்து முகத்தைக் கண்டு அதுவழியாக நின்று, ஒரு பெரியோன் வாடிய மேனியனும் வாடாத்தழையனுமாய் நம்புனத்தை விட்டுப் போவதுஞ் செய்கின்றிலன்; தன்குறை இன்னதென்று வெளிப்படச் சொல்வதுஞ் செய்கின்றிலன்; இஃதென்ன மாயங்கொல்லோ அறிகின்றிலேனெனத் தோழி, தான் அதற்கு நொந்து கூறா நிற்றல்.

ங. விரவிக் கூறலென்பது :—வன்மொழியாற் கூறின் மனமெலியு மென்றஞ்சி, ஓரலவன் றன் பெடைக்கு நாவற்கனியை நல்கக்கண்டு ஒரு பெருந்தகை பேய்கண்டாற்போல நின்றான். அந்நிலைமையை நீ கண்டாயாயின் உயிர் வாழமாட்டாய்; யான் வன்கண்மையேனாதலான் ஆற்றியுளேனாய்ப் போந்தேனென மென்மொழியோடு சிறிது வன்மொழி படக் கூறா நிற்றல்.

ச. அறியாள் போறலென்பது:-பேய்கண்டாற்போல நின்றான் எனத் தலைமகன் நிலைமை கேட்ட தலைமகள் பெருநாணினளாதலின், இதனை, அறியாதாளைப்போல இஃதொரு கடல்வடிவிருந்தவாறு காணெனத் தானொன்று கூறா நிற்றல்.

இத்துறைகள் இவ்வாறாகலின், இவற்றிற்குத் தலைவன், தோழி, தலைவி எனு

மூவரும், தலைவன் வந்திருந்த விடமுங் கொள்வர் பொருளுணர்ந்தோர்.

ஆகலின், இவ்வறியாள்போறற் றுறைக்கும் அவ்வாறுதல் வேண்டும்.

மேற்படி 'சங்கம்' எனு முற்குறிப்புச் செய்யுள் கடன்மேல் வைத்துக் கூறப் பட்டதாகலின் அதில் அவ்வாறமைக்கப் பட்டிருக்கின்றதா? எனப் பார்ப்பின், கடல் போன்றவன் பெரியான் (சிவபெருமான்) தலைவன்; வான் கழி அல்லது ஆன்கழி போன்றது புனம்; தோழி போன்றது மனம்; தலைவி போன்றவன் மணி மொழிப் பெருமான், (மாணிக்க வாசகர்) எனக் கொள்ளக் கிடக்கின்றது.

ஆகவே, இச்செய்யுட்குப் பேராசிரியர் வரைந்த உரையைக் கொண்டே 'வான் கழி' எவ்விடமாகின்றதெனச் சிறிதாராய்வாம்.

முன்னர்க் கடலின் மேல் வைத்துச் சொன்ன பொருளைப் பற்றிப் பார்ப்போம்.

பேராசிரியர் பிண்டமாகப் பொருள் கொண்டார்; யாம் அதைக் கண்ணழிவாக (சொற் பொருளாக)க் கொள்வாம். எங்ஙனமென்றால்:

சங்கம் தரும் முத்து—சங்கீன்ற முத்துக்களை, யாம் பெற-நாமடைய, வான்கழி - பெரிய கழியை, தான் கெழுமி-தான் (கடலானது) பொருந்தி, பொங்கும் புனல் கங்கை தாங்கி-பொங்கும் புனலையுடைய கங்கையைத் தாங்கி, பொலி கலி பாறு உலவு-பொலிந்த ஆரவாரத்தையுடைய பாறிய மரக் கலங்களியங்கும், துங்கம் மலி தலை ஏந்தலின்-(திரைகளின்) மிகுதியையுடைத்தாகலின், எனக் கடலிற் கேற்பவும் என்றார்.

எனவே, கடலானது சங்கு தருகின்ற முத்துக்களை நாம் பெறப் பெரிய கழியை வந்து சேர்ந்தது என்பது கருத்தாகின்றது.

ஆகலின், கடல் வந்து சேர்ந்த இடமாயமைந்தது 'வான் கழி' என்றதாயிற்று.

இனித், தில்லைவானவன் மேல் வைத்துச் சொன்ன பொருளை ஆராய்வாம்.

சங்கந் தரும் முத்தி-(திருவடிக்கணுண்டாகிய) பற்றுத் தரும் முத்தியை, யாம் பெற-யாம் பெறும் வண்ணம், வான் கழி-(எல்லாப் பொருளையும் அகப்படுத்தி நிற்கும்) ஆகாயத்தையும் கடந்து நின்ற, தான் கெழுமி-தான் ஒரு வடிவு கொண்டு வந்து பொருந்தி, பொங்கும் புனல் கங்கை தாங்கி-பொங்கும் புனலையுடைய கங்கையைச் சூடி, பொலி கலிபாறு உலவு-மிக்க ஆரவாரத்தையுடைய பாறிய புட்கள் சூழா நின்ற, துங்கமலி தலை ஏந்தலின்-உயர்வு மிக்க தலை யோட்டை ஏந்துதலின், எனத் தில்லை வானவற் கேற்பவும் உரைக்க வென்றார்.

எனவே, திருவடிப் பற்றுத் தரும் முத்தியை யாம் பெறத்தான் ஒரு வடிவு கொண்டு வந்து பொருந்தினான் என்பது கருத்தாகின்றது.

பேராசிரியரும், அங்ஙனம் பெரியவன் தன் மாட்டுண்டான புணர்ச்சியான பேரின்பத்தை நாம் பெறுகை காரணமாக, இங்ஙனம் எளிவந்து உன்னை வந்து சேர்ந்தான், அஃது என் போலவெனின், பெறுதற் கரிய சங்கு தருகிற முத்தை நாம் பெறுவான் எளிதாகக், கடல் பெரிய கழியை வந்து பொருந்தினாற் போலாம் என்றார்.

அவர் என்போலவெனின், என்பதனால், கடல் கோள் உவமைப் பொருளும், தில்லைவானவன் கோள் உவமிக்கப் படு பொருளும் ஆகின்றன.

ஆகவே, கடல் 'வான் கழியை' இடமாக வந்து சேர்ந்தாற் போலத் தில்லை வானவன் 'வான் கழி அல்லது 'ஆன் கழி'யை இடமாகச் சேர்ந் திருத்தல் வேண்டும்.

அங்ஙனங் கூறாமல் இடத்தைத் தோழி மேலேற்றி 'வான் கழி' என்றதற்கு 'ஆகாயத்தைக் கடந்து நின்ற' என்றார். இங்ஙனங் கூறின் ;

(தொடரும்.)

மா. வடிவேலு முதலியார்

இல்லறம்

(௨௭-ம் பக்கத் தொடர்ச்சி)

௩.—ஒத்த அன்பு.

அவ்வறங்கள் இரண்டினுள் இல்லறமாவது அன்பினால் ஒத்த தலைவனும் தலைவியும் கூடி இயற்றும் அறமாம். ஒத்த அன்புடைய தலைவிக்குத் தலைவனே உயிர். ஒத்த அன்புள்ள தலைவனுக்குத் தலைவியே உயிர் இறையனாரகப் பொருள் இரண்டாஞ் சூத்திரத்தின் கண்ணதாகிய "தானே யவளே" என்னுந் தொடருக்கு அதனுரைகாரர் 'தானே அவள் அவளே தான்' என்று பொருள் கூறினார். இதுவே ஒத்த அன்பினியல்பு. சகடத்தைச் செலுத்துதற்குரிய சகடக்கால்கள் இரண்டும் இருசு ஒன்றினால் ஒன்றோடொன்று தொடர்புற்றியைந் திருப்பதுபோல இல்லறத்தை நடத்துவதற்குரிய தலைவன் தலைவியென்னும் இருவர் உள்ளமும் ஒத்த அன்பினால் தொடர்புற்று இயைந்திருத்தல் வேண்டும். ஈரம் இல்லாவிடின் பயிர்கள் செழித்து வளராததுபோல ஒத்த அன்பு இல்லாதவர்களின் இல்லறமும் செழித்து வளராது. நீர்வளமுடைய சோலையானது செழித்தோங்கிப் பலர்க்கும் பயன்படுவது போல ஒத்த அன்புடையவர்களால் நடத்தப்படும் இல்லறமும் செழித்தோங்கிப் பலர்க்கும் பயன்படுவதாகும்.

௪. ஆடவர் கடமை.

தன்மனைவியைத் தனக்கடிமைப்பட்டவள் எனக் கருது மாடவன் ஒரு சிறிதும் இல்லறத்தின் நேர்மையை அறியாதவனே. அங்ஙனம் நினைந்தொழுகும் ஆடவன் தன்வாழ்க்கைநலத்தைத் துன்பத்தின் காலால் துவைப்பிப்பவனே. தன் வாழ்க்கைத் துணைவியைத் தன்னொப்ப நினைந்து நடக்கு மாடவனே தன் வாழ்க்கை நலத்தைப் பொன்மாவணையிற் பொலிவுறச் செய்கின்றான். வாழ்க்கைத் துணைவியைக் குறித்து வழங்கும் மனைவி, மனையாள், இல்லக்கிழத்தி, இல்லாள் என்னுஞ் சொற்களின் பொருளை நன்காராய்ந்துணரின் வாழ்க்கைத் துணைவியின் உரிமையும், மேன்மையும் இனிது விளங்கும். அன்றியும் பண்டையோர் வாழ்க்கைத் துணைவியர்பால் வைத்திருந்த நன்கு மதிப்பும் புலனாம். நல்லறமென்னும் இல்லறமாகிய சகடத்தை இடர்ப்பாடில்லா வின்புறு நெறியிற் செலுத்த விழையு மாடவன் தன் மனையாள்பால் அன்பும் நன்கு மதிப்புமுடையோனாய் அவட்குத் தன்னாலியன்றாங்கு ஆடையணிகளை யளித்தும் இன்மொழிகள் கூறியும் அவளை மகிழ்வித்தல் வேண்டும். மனைக்கு விளக்க மடவாள். ஆதலின், அவள் மனமாகிய தகளியில் அன்பென்னும் நெய்யும், மகிழ்வென்னுந் திரியும் குறைவின்றி யிருக்கும்படி செய்தலே ஆடவனது இன்றியமையாத கடமையாகும். அவைகள் அங்ஙனம் அமைந்திருக்கச் செய்யின் அவ்விளக்கம் ஒளியுடனிலகி மனையை விளக்கும். இன்றேல் அஃது ஒளி குன்றிவிடும் அதனால் மனையின்கண் இருள் சூழ்ந்துவிடும். ஆடவன் தன் மனையாளை நன்கு மதித்து நடத்துவனேல் பிறரெல்லாந் தாமே மதித்துப் போற்றுவர். அதனால் அவன்றன்குடி உயர் குடியெனக் கருதப்படும். அவள்பாற் றோன்று மக்களும் பொலிவும் திறனும் பொருந்தியவராயிருப்பர். அன்றியும், அம்மக்கள் எழுமை எழுபிறப்புந் தீயவை தீண்டாப் பண்புடையருமாவர். பெற்றோர் நெறியே பிள்ளைகள் நெறியாம். ஆடவன் மனையாட்குச் செய்தற்குரிய மற்றுஞ் சில கடமையுமுண்டு. அவை தன் மனையாட்கு நன்னெறிகளை விளக்கியுரைத்தலும் அவள் கற்பன கற்று நல்லறிவு உடையவளாகும்படி செய்தலும் ஆம்.

௫. இல்லக்கிழத்தியின் கடமை.

இல்லாள் நல்லியல்பு இல்லாதவளாயின் மனைவாழ்க்கை இருள் சூழ்ந்த காட்டின் வாழ்க்கையினுங் கேடு பயப்ப

தாம். மனை மாட்சியானது மனைக் கிழத்தியின் நல்லியபுன் மாட்சியினாலேதான் விளங்குவதாகும். இல்லக்கிழத்தி தன்னுடைய நலத்தினை விரும்புவது என்பது யாதெனில், தன் கொழுநனை நன்கு பேணி அவன் மகிழ்வன புரிதலே. உடலானது தன்கண் உயிருள்ள அளவுந்தான் இயக்கமும் பொலிவும் உள்ளதாம். அது நீங்கியவுடன் அவையிரண்டுமற்றழியும். மனையாள் தன்மையும் அவ்வுடலின் தன்மையைப் போன்றதே. ஆதலின் மனையாள் தன்னுயிராகுங் காதலன் இனிது வாழும்படி அவன்றன்னைக் கண்ணுங் கருத்துமாய்ப் பேணுதல் வேண்டும். மனைக்கிழத்தி தன் கொழுநன் செல்வனாயின் தானுஞ் செல்வியாகின்றாள். ஆதலின் இல்லக்கிழத்தி தன்கொழுநனுடைய வருவாயினை அறிந்து அதிற் சிறிதெனினும் மிச்சப்படும் வகையாகச் செலவு செய்தல் வேண்டும். மனையாள் தன்னுடைய நல்லியல்புகளால் தன்னையும் தற்கொண்டானையும் பழிச்சொல் லெய்தாவண்ணங் காத்து அந்நல்லியல்புகளிற் சிறிதுஞ் சோர்வின்றி உறுதியுடனிருத்தல் வேண்டும். மனையாள் அங்ஙனமிருப்பின் அவளையும் அவள் கொழுநனையும் மண்ணுலகத்தாரேயன்றி விண்ணுலகத்தாரும் புகழ்வர். அங்ஙனம் புகழுண்டாம்படி நடக்கு மனையாள் தன் காதலனை அவனது பகைவர் முன்னே வயமாப்போல் பெருமிதமுற்ற நடையோடு செல்லச் செய்கின்றாள். அல்லாதாள் தன் கொழுநனை அவன் பகைவர் முன்னே நாணத்தினால் தலைகுனிந்து செல்லச் செய்கின்றாள். (தொடரும்)

கா. ர. கோவிந்தராஜ முதலியார்.

மருத்துவம்

நாள்வழக்க வொழுக்கம்

வெண்பா

"திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காம
—லுண்ணுங்கால்
நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி
[யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி."

இவ்வுலகின் கண் வாழும் மக்களை வரும் நாடோறும் உண்டு உடல் வளர்க்கும் உணாக்களின் வழக்கமும், அவற்றை ஆளுதற்கண் வேண்டும் ஒழுக்கமும் கூறுவதிவ் வெண்பா.

(இ-ள்) இரண்டு - நீர் மலமிரண்டையும், உள்ளே - நீர்ப்பையினுள்ளும் மலக்குடரினுள்ளும், சிக்க - தங்கிவிடும்படி, அடக்காமல் - (வெளிப் படுவனவற்றை) மறிக்காமலும், பெண்ணின்பால் - பெண்ணினிடத்தில், ஒன்றை - ஆண் கூற்றை, பெருக்காமல் - (மிகுதியாகச்) செலவிடாமலும், உண்ணுங்கால் - உணவுண்ணுங் காலத்தில், நீர் - குடிப்பதற்குரிய நன்னீரை, கருக்கி - காய்ச்சியும், மோர் - மோரை, பெருக்கி - நீர் விட்டுப் பெருக்கியும், நெய் - நெய்யை, உருக்கி - உருக்கியும், உண்பவர்தம் - உண்கின்ற (வழக்கம்உடைய)வர்களுடைய, பேர் - பேரை, உரைக்கின் - சொன்னாலும், பிணி - நோயானது, போம் - விட்டகலும், திண்ணம் - இஃதுண்மை. (எ-று)

இதனால் நீரைநீர்ப்பையின் கண்ணும், மலத்தை மலக்குடரின் கண்ணும் அவைகள் வெளிப்படுங் காலத்தில் அவற்றை மறிக்கக் கூடாதெனவும்; பெண்ணின்பத்தை விதிக்கு மீறி விரும்பக் கூடாதெனவும் குடிக்கு நன்னீரைக் காய்ச்சியும் மோரை நீர்விட்டுப் பெருக்கியும் நெய்யை உருக்கியும் உண்ணவேண்டுமெனவும் கூறினவாறாயிற்று.

இவ்விதிகளை விதித்தவாறுண்டார்க்கு நோயில்லையெனவும், ஆண்டுண்ணா

தார்க்கு நோயுண்டெனவும், அந்நோயும் அவ்விதிகளை ஆள்வோர் பேரைச் சொல்லினொழிவது திண்ணமெனவும், 'பேருரைக்கிற் போமேபிணி' என்பதால் விளங்குகின்றது.

மன்பதைகள் நோயின்றி வாழ மருத்து நூலோர் வைத்த விதிகளின்படியொழுகாதவரை, வருத்து நோய்களையொழிக்க, வகுத்துள்ள மருந்துகள் உண்ணினும் அகலற்கரியனவான நோய்கள் பல தூண்டலின், 'பேருரைக்கிற் போமே பிணி' என்றது பெரிய மூரண்மேயெனின்; அற்றன்று, அவ்விதிக்கடங்காதாரை அறிவுறுத்தற்கே விதிக்கடங்கியாரைச் சிறப்பக் கூறியதென்க.

பதினான்கு விரைவுகள் மறித்தலில், நாளும் தவிராக் கடன்களாக விருப்பன நீரும், மலங்கழித்தலுமாகலின் அவற்றை முன்னர்க்கூறினர். அவ்விரண்டையும் மறித்தலின் நாடோறு நோய்படவேண்டுமாகலின், அவை:—

நீரையடக்கின்--நீர்க்கட்டு, நீர்ப்புழைபுண்ணாதல், உடலின்கணுள்ள பூட்டுக்களெல்லாம் நோதல், ஆண்குறி துவளலுடன் நோதல், கீழ்வாய்வளி மிகுதிப்படல் இவைகளுண்டாவனவாம்.

மலமடக்கின்—கீழ்வாய் வளி மலத்தைத் துண்டு துண்டாக வெளிப்படுத்தல், நீரேற்றம், முழங்காலின் கீழ் நோதல், தலைவலி, கீழ்வாய் வளி ஒலியோடு வெளிப்படல், உடல் வன்மை குறைதல், வேறு வியாதிகள் மிகுதியாதல் இவைகளுண்டாவனவாம். இங்ஙனம் நீர் மலம் இரண்டைக்கூறினும், மற்றைய பன்னிரண்டையும் கொளல் வேண்டும் என்பரொரு சாரார்.

அப்பன்னிரண்டாவன: கீழ் வாய் வளி, தும்மல், கொட்டாவி, பசி, நீர் வேட்கை, கண்ணீர், இருமல், இளைப்பு, தூக்கம், வாந்தி, ஆண்கூறு, உயிர்ப்பு என இவை.

இவற்றை யடக்கினும் பிணியுண்டாதல் வழக்கே. அவை:- க. கீழ் வாய்வளி (அபானவாயு) அடக்கின்—மார்புவலி, திரள்வலி, வயிற்றுவலி, உடம்பு முற்று நோதல், மண்ணீரல் மலர்தல், நீர்க்கட்டு, மலக்கட்டு, பசிக்குறைவு இவைகளுண்டாவனவாம்.

உ. தும்மலடக்கின்--தலைவலி, வாய், கண், மூக்கு, காது இவை தெறிப்பது போலிருத்தல், முகவலி, இடுப்புவலி, கீழ்வாய் வளி யடக்குவதாலுண்டா நோய்கள், இவைகளுண்டாவனவாம்.

ங. கொட்டாவி யடக்கின்—இளந்தலை யிளைப்பு, சோறு செரியாமை, சூடு, அறிவு நிலையின்மை இவை விரைந்து வருவனவாம்.

ச. பசி யடக்கின்—உடல்வன்மையின்மை, குற்றல், அறிவு நிலையின்மை, உடலிளைத்தல் இவைகளுண்டாவனவாம்.

ரு. நீர்வேட்கை யடக்கின்--முகவாட்டம், கைப்பூட்டுகள், காற்பூட்டுகள் நோதல் இவைகளுண்டாவனவாம்.

சு. கண்ணீரடக்கின்—தமர்நோய், மூக்கு நோய், கண்ணோய், தலைவலி, இவைகளுண்டாவனவாம்.

எ. இருமலடக்கின்—மிகு இருமல், பெருமூச்சு, தமர்நோய் இவைகளுண்டாவனவாம்.

அ. இளைப்படக்கின், சூட்டால் விளையுநோய்கள், வயிற்று நோய், பேச்சு மூச்சில்லாமை, தும்மலை யடக்குவதாலுண்டாங் குணங்கள் இவைகளுண்டாவனவாம்.

கூ. தூக்கமடக்கின் — நாடோறுந் தலைப்பளுவு, கண்ணோய், செவிடு, பேச்சுத் தெளிவின்மை, கீழ்வாய்வளியடக்குவதால் உண்டாங்குணங்கள் இவைகளுண்டாவனவாம்.

ய. வாந்தியடக்கின்— பெருநோய், நமை, வெண்மையுடல், (குருதி குறைதல்) கண் நோய், பெரு வயிறு, மேல் மூச்சு, காய்ச்சல், இருமல் இவைகளுண்டாவனவாம்.

கக. ஆண் கூற்றையடக்கின்--காய்ச்சல், நீர்க்கட்டு, ஒரு பக்க நோதல், கை நோ, கால்நோ, பூட்டுகள் நோ, மார் நோ, வெள்ளை நோ, கீழ் வாய் வளியை யடக்கின் உண்டாம் நோய்கள் இவைகளுண்டாவனவாம்.

கஉ. மூச்சு அடக்கின்—இருமல், வயி

றாதல், நாக்கு சுவையின்மை, குலேயிடிப்பு, சூடு, காய்ச்சல், கீழ்வாய் வளியடக்கிறுலுண்டாகும் நோய்கள் இவைகளுண்டாவனவாம்.

மேலே குறிக்கப்பட்ட இரண்டே சிறப்புள்ளனவும், மற்ற பன்னிரண்டும் அவ்வளவு சிறப்புடையனவல்ல வென்பதும் இதனுற் போந்தவாறறிக.

திங்களுக்கோர் நாளிலேயே பெண்ணின்பம் வேண்டுமென்பதே அதற்குரிய விதியாதலின், 'பெண்ணின்பாலொன்றைப் பெருக்காமல்'' என்ருர். இதனை,

"பெண்கடமைத் திங்களுக்கோர்
நாலன்றி மருவோம்"—என்பதாலுமறிக.

(தொடரும்)

மருத்துவன்—வடிவேலனுர்.

மார்க்கண்டேயர்

கூத்து

முதல் உறுப்பு. க-வது காட்சி.

இந்திரன் கொலு.

(அகத்தியர், அத்திரி, வசிட்டர் முதலிய முனிவர் எழுவரும், புனல், அனல், வளி முதலிய தேக்களும், யாழேந்தியிசை புரியும் கந்தருவர்களும், கவரி வீசும் இரு அர மகளிரும், அரம்பை முதலிய அரக்கூத்தியரும் கூடிய இந்திர வரங்கத்தில் ஓர் சார்பில் வியாழ விறையும் மற்ருேர் சார்பில் இந்திர வமைச்சு கிழிக்கிழவனும் வீற்றிருத்தல், ஓர் கோடியில் மிருகண்டீய முனிவரும் வீற்றிருத்தல்.)

(இந்திரன் அவைக்களம் புகுதல்)

இந்திரன்:—(கைகூப்பிநிற்றல் அவையினர் எழுந்திருந்து கை கூப்பி நிற்றல்)

(விருத்தம்.)

கடவுள் துதி.

கானலிடைத் தெண்ணீரும் கயிற்றினில்
வாளரவும்அலே கடலிற் பட்ட
கூனமுதுசிப் பியில்தோன்று வெள்ளியும்
அம் முதலுண்மை குறிக்கில் தீரும்
ஆனவைபோல் நினையறியில் தோன்றுபுவி
யனைத்தும் நில்லாதழியும் ஆற்ருல்
தேனவிழ்பூங் கடுக்கையணி செல்வ! நினது
அறை கழல்தாள் சென்னி சேர்ப்பாம்

(காசி கண்டம்)

அவையினர்—

(இசைப் பாட்டு)

நிலேமேல் கீழ் நிலம் யாவுக்குங் கோனுய்
நேரிய கோலால் நிலேபெறச் செய்வோய்!
அலேநீம் பாற்கடல் தன்னிலே தோன்றிய
ஆர்கிழி கூலங்கட்கானவிறையே!
சீர்சால் உன்றன் திவல் வளே வாழ்க
கார்வழுக் கானைக் கடவுளே வாழ்க
பேரிய லுற்ற நின் பிரிவறு மனே வாழ்க
பீடுறு முனதாட்சி பிறங்கி வாழ்ந்திடுகவே.

(எல்லோரும் அமர்தல்.)

இந்திரன் :—எங்களுக்கு நல்லறிவைப் புகட்டி யெங்களே நல்வழிப்படுத்தும் இறைவரே தங்களேப் பணிகின்றேன்.

(இந்திரன் பணிதல்)

வியாழ விறை :—இந்திரா ! நூறு பரி வேள்விகளேச் செய்து முடித்தவர்களும், அரசவேள்விகளே நிறைவேற்றியவர்களும், அந்த வேள்விகளின் பயனுக் கேற்ற மேன்மை நிறைந்துள்ள ஐம்புலனடக்கியுன்னும் செவ்விய நோன்பைக் கடவுளேக்கருதிப் புரிந்து மேனிலே விளேவுகளேத் துய்க்க விரும்பியவர்களும் அடைகின்ற உன்னுடைய நிலே நல்வினைப் பயன் மிகுதியால் கிடைக்கத் தகுந்தது. அப்படிப் பட்ட இந்திர நிலேயை யடைந்து, எங்களேயெல்லாங் காத்தும், பூமியிலுள்ளவர்க்கு உன் ஆணையில் நிலவும் ஏழு மழைகளிற் சிலவற்ருல் மழை பெய்வித்தும் ஞாலத்தார்க்கு நற்பிழைப்பை யூட்டும் நல்லோனே! எண்ணிய கூட்டும் இனியதரு, ஆசைப்பட்டன

வளிக்கும் ஆமுதலிய சிறந்தபொருள்களுக்குத் தலைவனே! உனது செம்மையான நெறி முறையால் உனக்குப் பெருமையும் புகழும் ஓங்கித் தானவப் பகைவர் ஆணைக்கடங்கி உனக்கு நல்லனவென்றும் நலமுற வளர்வதாக.

இந்திரன் :—வணங்குகின்றேன்.

வியாழ விறை :—இன்றைய தினம் ஆடல் பாடல் புரிய ஏற்பட்ட முறைப்படி யார் வரவேண்டும்?

கிழிக்கிழவன் :—இன்றைக்கு அரம்பையினுடைய முறை. அரம்பை தான் இன்று அரசவையில் ஆடல் புரிய வேண்டும்.

(அரம்பையை நோக்கல் அவள் அணுகல்)

அரம்பை :—வானவர் தலைமை வகித்த வேளே, தே விறையனுரே, அவையினரே! அடியாள் அரம்பை அடிபணிகின்றேன். இன்று எனது ஆடல் பாடல்களைக் கண்டு, கேட்டு என்னை கடைக்கணிக்க வேண்டுகின்றேன்.

அவையினர் :—நலமலிக, நலமலிக. ஆடலைத் தொடங்கலாம்.

(அரம்பை ஆடல் புரிதல்)

அவையினர் :—நன்று! நன்று!

(நாரதர் நண்ணல்)

நாரதர் :—(தனக்குள்) நிலைகளில் இந்திர விளைவு துய்க்கும் இனிய இந்நிலை மேம்பட்டதே. நல்வினை புரிந்த உயிர்கள் விண்ணவராகப் பிறந்து மிகுந்த நல்வினைப் பயனால் தே விறையாகிய இந்திரனாக வந்து துய்த்து மகிழ்வடைய அமைக்கப்பட்ட நிலையிது வாகும். இந்நிலையிலுள்ளவர் கூற்றுவனால் கட்டுண்ணாத வயது, தேவூணருந்தலால் தீராத உடல்நலம், இமையாத கண்கள், வாடி வதங்காதமலர் அலங்கல், கேட்டவற்றைத் தரும் தேத்தருவின் கொடை, தரையில் படியாத நடை, தேவாவின் சீர்த்தி, அரமகளிரின் சீர்த்தி, கிழிக்கிழவன் தன் நட்பு வியாழவிறையின் திட்பம் ஆகிய இவை யிந்நிலை யடைந்தவர்க்கு ஏற்றவையே.

(உள்ளே செல்தல்)

தக்கவேளை தான். அரம்பையின் ஆட்டம், அதில் என் உள நாட்டம்; கந்தர்வப்பாட்டின் தகைமை, செம்மை சேர் செவிக்கினிமை. நல்லது.

(அவையினுள்ளே நுழைதல்)

(அவையினர் நாரத முனிவரை வணங்கல்)

இந்திரன் :—நாரத முனியே நண்ணிய தம் இணையடிகளை நயந்து பணிகின்றேன்.

நாரதர் :—இந்திரா உனக்கு இனிமை விளைக, தகைமை செழிக்க.

இந்திரன் :—அணையி லமரவேண்டுகின்றேன்.

நாரதர் :—அப்படியே (தனக்குள்) இன்றைக்கு நமக்குப் பொழுது போக்காக எந்த வேலையை முன்னிட்டு நாம் அலைந்து திரியலாம். (எண்ணல்) இதுவரையில் மலரோன் நிலை, மாலோன் நிலை, மாணருட் சிவமலை வந்தோம். ஒன்றும் கருவியாய்க் கிடைக்கவில்லை. இவ்விடத்திலாவது ஏதேனும் ஏற்படுமா வென்று இங்கு வந்திருக்கிறோம். என்ன கிடைக்குமோ பார்ப்போம். பொறு மனமே பொறு.

இந்திரன் :—புலனடக்கம் பெற்ற பெரியீர்! வினைகளுக்கேற்ற பிறவிகளின் வரலாற்றை யறிய விரும்புகிறேன். அதைப் பற்றித் தங்களை விரித்துரைக்க விரும்புகிறேன்.

நாரதர் :—சொல்லுகிறேன் கேள். மிகுந்த நல்வினைப் பயனால் விண்ணவர் விளைவுகளும், அந்த நல்வினையோடு சிறிது தீவினையும் சேர்ந்திருந்தால் தேவா, தேயானை, தேப்பரிகளாகிய வானவர் நாட்டு மாப்பிறவிகளும்; இன்னுஞ் சிறிது மிகுதியாய்த் தீவினை சேர்ந்திருந்தால் தேத்தரு முதலிய மரஞ் செடி புல் பூண்டு பிறவிகளும்; அரைப் பங்கு நல்வினையும், அரைப் பங்கு தீவினையும் கூடிய உயிர்களுக்குப் பூமியில் மக்கள் பிறவிகளும், அதில் அரைப் பங்கு தீவினையோடு இன்னும் சிறிது தீவினை

மிகையா யிருந்தால் தீமையும் மாத் தன்மையும் அமைந்த மனிதப் பிறப்புகளும் ; பின்னும் மிகுதியாய தீவினையும் நல் வினைக்குறைவு முடைய உயிர்கட்கு ஆ, யானை, குதிரை, மான், ஆடு முதலிய மாப்பிறவிகளும் ; அரசு வேம்பு முதலிய தருக்கள் பிறப்பும், இன்னும் மிகுந்த தீவினை செறிந்த உயிர்கட்குக் கொடுந்தன்மை யமைந்த புலி முதலிய தீய மாப்பிறவிகளும்; வேல், விளா, கருங் காலி முதலிய முள்ளுடைய தருப் பிறப்பும் உயிர்கள் அடையுமென்பது மறைநூன் முடிபாம்.

இந்திரன் :—மலரவன் மைந்தரே! தாங்கள் கூறியபடி இருவினைகளுக்கு ஏற்றபடி உயிர்கள் உயர்ந்த நிலை முதல் தாழ்ந்த நிலை வரையில் பிறவியெடுப்பது விளக்கமாயிற்று. ஆனால் மனிதப் பிறவி எடுத்தோருள் அவரவர்கள் கடைப்பிடித் தொழுகும் அறங்களைப் புரிந்தும் தீவினை செய் பிறவிகளாய் மேலான நிலையையடையாதவர்களும் உண்டா ? அதைப் பற்றி யறிவிக்க விழைகிறேன்.

நாரதர் :—அதைப் பற்றி அகத்தியர் சொல்வா ராயின் நமக்கெல்லாம் விளக்கமாகும் இந்திரா.

இந்திரன் :—அப்படியா, தமிழறிந்தாய்ந்த தகையோய்! அதைப்பற்றி யறிவிக்கத் தங்களை வேண்டுகிறேன்.

அகத்தியர் :-இந்திரா நினைவாகக் கேள், மாந்தர்ப் பிறவிகட்கு ஏற்பட்டுள்ள மறை நூல் கற்கும் மாணவர் நிலை, இல்லறம், கானுறை இல்லறம், துறவறம் என்னும் நால்வகை யற நிலைகளிருக்கின்றன. அவற்றுள் இல்லறம், கானுறை யில்லறம் மனைவியோடு கூடி நல்ல நெறியில் ஒழுகும் அறநிலைகள். மற்றவிரண்டும் பற்றற்று பொறி புலன்களடக்கிக் கடவுள் அருளைப் பெறமுயற்சி செய்யும் நிலைகளாகும். ஆகவே, மனைவியோடு கூடி நடத்தும் நாடுறைஇல்லறநெறியில் புதல்வர்களை பெறுதலும்; மனைவியிடத்தும், புதல்வரிடத்தும் அன்புடைமையும்; தென்புலத்தார், கடவுளர், விருந்தினர், சுற்றத்தார், தான் ஆகிய ஐவகையோரைப் பேணலும்; இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை ஆகியனவையும் சிறந்தவைகள். இல்லற ஒழுக்கங்களில் தவறாமலும், தீய செயல்களில் தலையிடாமலும் நடப்பவர்களுக்கு நல்லமேலான வானவர் நிலைகள் வாய்க்கும். புத்திரப்பேறு நீங்கலாக மற்றவை யெல்லாம் இருப்பினுங் கூட புதல்வரைப் பெறாதவர்களுக்கு மேனிலைகள் வாய்க்கா. (புத் என்னும்) நிரயமே வாய்க்கும். அந்த நிரயத்தில் வீழ்ந்து வருந்தா வண்ணம் அதினின்றும் காப்பவனே புதல்வனாகும். ஆகையால் புதல்வனைப் பெறாதவர்க்கு விண் நிலையில்லை யென்றறிவாய்.

இந்திரன் :—ஐயோ பாவம்! அப்படி மகப் பேறு பெறாமல் மற்ற நல்லறங்களெல்லாம் பற்றி யொழுகுவோர் இப்போது பாரில் எவரேனும் உண்டா ?

வளிதே :—இறையே யியம்புவன்யான். மனையறங்களை யிறையளவும் தவறாமல் இயற்றியும்; நோன்பினால் தூய்மையைப் பெற்றும்; அருள், அடக்கம் முதலிய அரிய நெறிகளுக்கு ஓர் பிறப்பிடம் போன்றுமுள்ள மிருககண்டேய முனி என்பவர் மருத்துவதி யென்னும் மனைவியோடு காட்டில் இல்லற ஒழுக்க நெறியில் நிற்பவர். முனிபிரான். அத்தகைய மிருகண்டேய முனி பிரானுக்குப் புதல்வரில்லை.

இந்திரன் :—ஓ அப்படியா, அவருக்கு நன்னிலை யில்லையென்றுதான்சொல்ல வேண்டும்.

கிழிக்கிழவன்:—ஆமாம். அதில் ஐயம் என்ன? (புத் என்னும்) நிரய வாய்ப்பே அவருக்கு ஏற்பட்ட மேனிலையாகும்.

(அவையினர்
தலை குனிந்து அமைதியுறல்)

மிருககண்டேயர்:—(தலை யிரக்கத்தோடு தனக்குள்) நமது பிறவி பாழ்பட்

டதே, ஐயோ கடவுளே! பேரன்பு நோன்புமுதலிய தூய ஒழுக்கங்களெல்லாம் புதல்வனில்லாக் குறையால் பெருமையற்று எனக்கு மேனிலையை யளிக்காவிடினும் (புத் என்னும்) நிரயமாவது சேராதபடி காக்கவும் திண்மையற்றன போலும்! இனி நாம் இவ்வவையி லிருக்கத் தகாது. வானவர் நிலையாகிய இங்கு இவ்விந்திர அவையும் இனிமேல் நமக்கு இருக்கவும் இடந்தராது போலும். ஆதலால்நாம் பிறரறியாதபடி இங்கிருந்து வெளிப்படுவதே நலம் (போதல்.)

நாரதர்:—இன்னும் நான் மக்கள் உறைநிலம் போகவேண்டும். எல்லா விடங்களையும் ஓர் நாளில் சுற்றி வருபவன் நான் ஆகையால் போகிறேன்.

இந்திரன்:—அப்படியே செய்யுங்கள். நிகழ்வுகளை மட்டும் அடிக்கடிஎனக்கு அறிவிக்கத் தவறாதீர்கள். வணங்குகின்றேன்.

நாரதர்:—இந்திரா இனிமை செழிக்க. அங்ஙனமே யாகட்டும்.

நாராயணா! நாராயணா! நாராயணா!

(போகிறார், அவைகலைதல்.)

[தொடரும்]

சோமு. க. சச்சிதாநந்த முதலியார்.

தையும் மாசியும் வையகத்துறங்கு

நந் தமிழ்நாட்டுச் சிறுவர்கட்கு மிக இன்றியமையாச் சிறப்பினவாகத் தமிழ்ப் புலமை நிறைந்த ஒளவைப் பிராட்டியார் பாடிவைத்த பல நூல்களுள், [1]'கொன்றை வேய்ந்தோன்' என்பது ஒன்றென்பதும், அதனுள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களும் விரவிக் கிடக்கின்றன என்பதும் யாவரும் அறிந்தனவே.

அத்தகைய மாட்சிமிக்க "கொன்றை வேய்ந்தோன்' என்பதிலிருந்தே மேற்கண்ட 'தையும் மாசியும் வையகத் துறங்கு' என்னும் தொடரை யெடுத்து விரிக்கப் புகுந்தனன்.

இத்தொடர்க்கு இப்பொழுது நந் நாட்டுத் தமிழ்க் கல்லூரிகளிலும், ஆங்கிலக் கல்லூரிகளிலும் 'முன் பனிவேளையிறுதியாகிய [2]சுறாத்திங்களிலும், பின்பனிவேளை முதலதாகிய [3]மொந்தைத் திங்களிலும் வைக்கோலால் வேயப்பெற்ற மனையகத்துத் துயிலுவாயாக' எனப்பொருள்கூறி, அங்குள்ள மாணவர் பலர்க்குத் 'தற்போது பட்டிகளிற் காணப்படுகின்ற கூரைக்கும் மதிலுக்கும் இடையே வெளியுள்ளதுவாய் மண்மதிலில் வைக்கோலால் வேயப்பெற்ற வீட்டிடத்தா னளிரினால் துன்பம் தோன்றாதிருக்கும்? செங்கல் சுண்ணம் முதலியவற்றால் கட்டிய மெத்தை வீட்டிலா னளிர்த்துன்பந் தோன்றும்?' என்ற ஐயங்களைத் தோன்றச் செய்து அவ்வையங்கட்கு விடையாகச் சில கணக்காயர்கள் [4]அடக்குமுறைகளைக் கையாடிக் கடனைக் கழிக்கின்றனர். இன்னுஞ் சிலர், 'பண்டை நாட்களில் பழங்குடிகள் வைக்கோலால் வேய்ந்த வீடுகளையே எளிய குடிசைகளைக் காட்டிலும் இந்நாட்களில் விளங்கும் அரண்மனைகளைப்போல உயர்ந்தனவாகக் கருதி யிருந்தனர். அதனால், அங்ஙனங் கூறப்பெற்றது' என உரோமாபுரி க்ரீஸ், சீனம் முதலிய பிறநாட்டாரோடு [5]செட்டுத் தொழிலைச் செம்மைபெற நடாத்தி வெள்ளிடை மலைபோல் விளங்கா நின்ற கோயில்களையும், அரண்மனைகளையும் குயிற்றிச் சென்ற நஞ் செந்தமிழ்ச் செல்வர்களுக்குரிய சீரினுக் கோரிழுக்கினை யியற்றா நின்றனர்.

---

1. இது 'கொன்றை வேந்தன்' எனவும் படும். 2. சுறாத்திங்கள்-தை மாதம். 3. மொந்தைத் திங்கள்-மாசி மாதம். 4. அடக்கு முறை தண்டனை. 5. செட்டு-வாணிபம்.

மற்றுஞ் சிலர், 'இக்கொன்றை வேய்ந்தோன் முதலியன நரை மூதாட்டியாரியற்றியனவல்ல. எவராலோ பாடப்பெற்று அவர் தம் பெயர் கொண்டுலாவுகின்றன' என வாய்ப்பறை யறைந்து வாளா செல்கின்றனர். ஆகலின், அத்தொடர்ப் பொருளைச் சிறிதாராய்ந்து விளக்கிச் செல்வதே சிறியேன் கைக் கொண்ட சீரிய கடமையாம்.

முன்பனி வேளை யிறுதியும் பின்பனி வேளை முதலுமாகிய கடும்பனி பெய்யும் சுறுத்திங்களிலும் மொந்தைத் திங்களிலும் இப்போது பட்டிகளிற் காணப்படும் கூரைக்கும் மதிலுக்கும் இடையே வெளி யுள்ளதாய் மண் மதிலின்மீது வைக்கோலால் வேய்ந்த மனையிடத்து நளிர்த் துன்ப மின்றித் துயிறல் வெந்நீரால் வீட்டைக் கொளுத்தலாம் என்னும் வெற்றுரையை யொக்கும் என்பதும், எவ்வீடாயினும் நன்கு மேற்கட்டு வேயப் பெற்று மதில்கள் ஓதம் ஏறுதபடி கட்டப்பெற்று வெண் சுண்ணம் தீற்றப் பெற்று கட்டில், இலவம்பஞ்சு மெத்தை முதலியவற்றுல் சீர்ப்படுத்தப் பெற வேண்டுவது இன்றியமையாதது என்பதும் அறிவாளிகட்குத் தெள்ளிதிற்புலனும்.

இனி, பண்டை நாட்களில் பழங்குடிகள் வைக்கோலால் வேய்ந்த வீடுகளையே எளிய குடிசைகளைக் காட்டிலும் இந் நாட்களில் விளங்கும் அரண்மனைகளைப் போல் உயர்ந்தன வாகக் கருதி யிருந்தனர் என்பது அறியாமையான் வந்தது என்று மதுரை, தஞ்சை, விஜய நகரம் முதலிய பெரிய பட்டணங்களிலுள்ள பழமையான அருமைமிக்க வேலைப்பாடுகள் நிறைந்த கோயில்களையும் அரண் மனைகளையும் நேரிற் கண்டவர்கட்கும், உசாவி யறிந்தவர்கட்கும் விரைவில் விளங்கும்.

அதன் பின், 'கொன்றை வேய்ந்தோன்', 'ஆத்திசூடி', 'மூதுரை' முதலிய நூல்கள் ஔவைப் பிராட்டியாரால் இயற்றியனவல்ல என்பதற்கு இதுவரை தக்கமேற்கோள் கண்டானமில்லை. அன்றி அவ்விதம் கூறுவோரும் காட்டினரில்லை. ஆனால் அவர்கள், 'ஔவை யாருடையனவாயின் இங்ஙனம் பொருளில் மொழிகள் புகுமோ?' எனக்கடாவுகின்றனர். அக்கடாவிற்கு விடையாகக் கொன்றை வேய்ந்தோன் அறிவிலாருடையதாயின் 'அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்' என்பன திருக்குறளினும் குறளாய்ப் பொருளில் விரிவாய்த் திகழுமோ?' என வினவி, யாண்டும் பொருளில் மொழிகள் புகவில்லை என்றும், நம் அறியாமையே அங்ஙனம் தோன்றுகின்றதென்றும் கூறிவிடுக்க.

நிற்க, இனி அத் தொடர்க்குப் பொருள் வருமாறு :—

தையும் மாசியும் - (முன்பனி வேளை யிறுதியாகிய) சுறுத்திங்களிலும்; (பின்பனி வேளை முதலதாகிய) மொந்தைத் திங்களிலும், வை அகத்து—(நளிர் உட்புகாதபடி மேற்கட்டிட்டு ஓதம் ஏறுதபடி வெண்சுண்ணம் தீற்றி கட்டில், இலவம்பஞ்சுமெத்தை முதலியவற்றுல் ஒழுங்கு செய்து) பாதுகாவலாகப் பார்த்து வைக்கப்பெற்ற வீட்டினிடத்து, உறங்கு - தூங்குவாயாக.

எனவே, நம் நாட்டினர்க்கு இளவேனில், முதுவேனில், கார், கூதிர் வேளைகள் அவ்வளவு தீங்கு செய்யா. இப்பனி வேளையே பலவித நோய்களுக்கு வழியாகும் என்பது பெறப்படும். ஆயின், பனி வேளையாகிய நான்கு திங்கள்களில் சுறுத் திங்களையும் மொந்தைத் திங்களையும் மட்டும் குறித்தது என்னையெனின், பனி வேளையாகிய 6கொடுமரத் திங்கள், சுறுத்திங்கள், மொந்தைத் திங்கள், 7மீன் திங்கள்களுள் சுறுமொந்தைத் திங்கள்களில் ஞாயிறு தெற்கு வீதியில் ஓடுவதாலும், நந்நாட்டில் பகல் நாழிகை இருபத்தெட்டாகக் குறைந்து இரவு நாழிகை முப்பத்திரண்டாக மிகுந்திருப்பதாலும் ஞாயிற்றின் வெம்மை குறைகின்றது. அதனுல்,

6. கொடுமரத்திங்கள் - மார்கழி மாதம்.
7. மீன்திங்கள் - பங்குனி மாதம்.

பனியின் கடுமை மிகுகின்றது. கொடுமரம், மீன்றிங்கள்களில பகல் நாழிகை அவ்வளவாகக் குறைதலின்மையால ஞாயிற்றின் வெம்மையும் அவ்வளவாகக் குறைவில்லாமலிருக்கின்றது அதனால், பனி அவ்வளவு கடுமையாக விருக்கவில்லை. ஆனதுபற்றியே, கொடுமரம் மீன்றிங்கள்களை விலக்கி 'தையும் மாசியும்' என்றார். வை - அகம் என்பது வினைத்தொகை; வைத்த அகம, வைக்கின்ற அகம், வைக்கும அகம் என விரியும். ஈண்டு, பாதுகாவலாகப் பார்த்து வைத்த (பொறுக்கியெடுத்த) வீடு என இறந்த காலத்தால் விரிக்க இதுபற்றியே பாதுகாப்புப் பொருட்டு வைப்பு என வழங்குவதூஉமென்க.

அன்றி, 'வைககத் துறங்கு' என்பது கேள்வி முறையாலோ, எழுத்தாளர் வழுவாலோ 'வையகத்துறங்கு' என்று மாறியது எனக்கொள்ளின் வைகு அகத்து உறங்கு எனப்பிரித்து, வைகு- (பனியுட்புகாதபடி கட்டப்பெற்று கட்டில் மெத்தை முதலியன அமைந்து) தூங்குதற்குத் தக்க: அகத்து வீட்டினிடத்து, உறங்கு - துயிலுவாயாக. எனப் பொருள் கொள்க. வைசகம் - பள்ளியறை. வைகல - துயிறல். 'வைகறை' என்பதற்கு அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் துயிலுறுதற்குக் காரணமாகிய பொழுது எனக் கண்ணழித்துச் சென்றமை ஈண்டுக் கருதத் தக்கது.

கட்டிலிட்டுறங்கல் நம் நாட்டிற்குரித் தன்றே? என்பார்க்கு உறக்கத்தின் பேராகிய தூங்குதல் என்பதே தக்க விடையாம். தொட்டில், ஊசல் முதலியவற்றால சிறியோரும், பெரியோருமாகிய நம் நாட்டினர் கண் வளர்ந்தமை யாவரு முணர்வர். தூங்குதல் - தொங்குதல்; இதனை 'நிணம் தின் வாயள் துணங்கை தூங்க' என்ற திருமுருகாற்றுப் படைக்கு நச்சினார்க்கினியர் வரைந்த உரையாற் காண்க.

இவ்வாராய்ச்சியானே 'தையும் மாசியும் வையகத் துறங்கு' அல்லது, 'வைககத் துறங்கு' என்பதற்குப் 'பகற்பொழுது குறைந்து பனி நோய் மிக்க சுறுத் திங்களிலும் மொந்தைத் திங்களிலும் தூங்குதற் கென்று ஆராய்ந் தெடுக்கப்பெற்ற அறையில, மற்ற வேளைகளிற் போல் விரும்பிய விடங்களில் உறங்காமல் துயிலுவாயாக என்பது தோன்றும்.

அபு க. ர். நடராஜன்
வேலூர்.

மாணவர் பக்கம்

தொடக்கக் கல்வி

[ஆரம்பக் கல்வி]

(௨௯-ம் பக்கத் தொடர்ச்சி)

முன் சொல்லிவந்த முறைகளில் கதை சொல்லல் என்னும பகுப்பில் சில குறிப்புகளையே கொடுத்தோ மன்றி யதனை யிவ்வகையாகக் கற்பித்தல் நலம் என்று தெரிவித்தோ மில்லை. நல்ல நெறிகளை யறிவுறுத்தக் கூடியதாய வரலாற்றைக்

'தந்தை தாய்ப் பேண்'

ஓர் வரலாறு.

கூறுவதால் சிறுவர்களுக்கு நல்லொழுக்கமும், நன்னெறிகடைப்பிடியும் அவர்கள் கலக்கமற்ற உள்ளங்களில் பதிந்து நாளடைவில் பயனை நடத்தையில் தருமென்பதில் ஐயமின்று. கதை வருமாறு.—

பண்டரபுரம் என்னும் ஓர் ஊரிருக்கிறது. அவ்வூரில் வயது முதிர்ந்த தலைவன் தலைவி யிருவரிருந்தனர். அவர்கட்கு அருமையான ஓர் பிள்ளை யிருந்தான். அவன் பெயர் புண்டரீகன் என்ப

தாம். அவனைப் பெற்றோர்கள் இளமையில் சீராட்டிப் பாராட்டிப் பள்ளியில் வைத்துக் கல்வி விளைத்து வயது வந்த போது கல்யாணமுஞ் செய்து முடித்தார்கள். ஆனால் பெற்றோர்களின் அன்பு போல் பிள்ளைக்கு அவர்களிடத்தில் இல்லை. தாய் தந்தையரை அசட்டை செய்து நடந்துவருவான். அவர்கள் சொல்வதை விரும்பி யமைதியோடு செவி சாய்த்துக் கேட்கமாட்டான் இப் புண்டரீகன். இப்போதும் நாம் பார்க்கிறோ மல்லவா? சில பிள்ளைகள் தம் தாய் தந்தையர்சொல்வதை "இக் கிழப் பிணங்கள் ஏன் சும்மா இருக்கமாட்டோம் என்கின்றன. இட்டதைத்தின்று விட்டு நமக் கென்னவென்று இராமல் எல்லாவற்றையும் வாரி தம் தலைமேல் போட்டுக்கொள்ளுகின்றனவே" என்று ஏளனமாகக் கூறுவதை நாம் உற்று நோக்கினால் பிள்ளைகளைப்போல் அவர்கள் இளம் வயதிலிருந்துதானே முதுமை யடைந்தார்கள்? எவ்வளவு பொருள்களைக் கண்டும் கேட்டு மிருப்பார்கள்? அத்தகையார் தமக்கு அருமை மக்களாகப் பிறந்து, பாராட்டி வளர்க்கப்பட்ட தம்பிள்ளைகளே தம்மை யசட்டை செய்யக் காணுவாராயின் அவர்தம் நெஞ்சம் நினைப்பதுதான் என்னவாயிருக்கும்! ஐயோ! அறிவிலா மக்களின் தீயவொழுக்க மிருக்குமா றென்னே! இவ்வகையான நெறியில் ஒழுகிய புண்டரீகனைப் பார்த்து அவனது மனைவியும் தன் கணவனது நடத்தையைத் தானும் கைக்கொண்டு, மாமனார் மாமியரைத் துரும்பாகக் கருதி, அன்பில்லாமல் நடந்து வந்தாள். இதனால் முதிர்ந்தோரது உள்ளக் குறை இத்தன்மைத்தென பிறர் உணர முடியாதவாறு அவர்கள் தங்கள் உள்ளத்திலேயே இக் குறையை யிருத்தி மூடியிட்டு, உள்ளபடி அமைந்த பேறு இதுவாகும் என, எண்ணி யதுவரையில் போதுமென்று உள்ள வமைதி யுற்றார்கள். புண்டரீகன் பெற்றோரை யெங்கேனும் போய்விடுமாறு கூற, இவ் வயது சென்ற பெற்றோர் தூயதட நீராடவும், தேக்கோட்டந் தொழவும் வெளிச்சென்றார்கள். இவர்கள் பிரிந்து சென்றது காளைய ரிருவர்க்கும் குறையில்லாக் களிப்பை யுண்டாக்கியது. சின்னாள் கழிந்தபின், புண்டரீகனும் அவன் தன் துணைவியும் முன்னோரைப் போலவே நீராடலையும், தொழுதலையும் பொழுது போக்காகச் சிறப்பகல் கழிக்கக் கருதிப் புறப்பட்டனர். இக் காளையர் வண்டியிலேறித் துன்பமில்லாது களந்தோறுஞ் சென்று வரும்போது முன் சென்ற இவர் தம் முதியோர் ஓர் ஊரில் ஓர் வீட்டுத் திண்ணையின்மேல் உட்கார்ந்து நடந்துவந்த களைப்பை யாற்றிக்கொண்டு இருப்பக் கண்டும் அவர்களை யணுகாமலே அண்டையிலுள்ள வோர் அறவோர் சாவடியிலிழிந்து தங்கினர். தாம் வந்துள்ள விடத்தும் தம் மகனும் மருமகளும் தம்மை யேறிட்டுப் பாராமலும் ஏனென்று கேளாமலும் இழிந்து சென்றதை யெண்ணிப் பார்த்தால் அவர்கள் நெஞ்சம் புண்ணாகாமல் இருக்க முடியுமா? வென்பதை யூன்றி யுணருவோமாயின், நம்முளம் படும் பாடுதான் யாது? இறைவனுக்கேதான் நிறைவாய் வெளியாகும். நம் உள்ள உணர்ச்சியை யறியும் முதல்வன் நம்மை நன்னெறியினின்று விலகாவாறு காக்க அவனைக் கருதுவோமாக. அண்டையில் தங்கிய புண்டரீகனைக் கண்டதும், அதிலிருந்த இரு அரமகளிர் இக்காளையரைக் காணவும் வெறுத்து வெளிச் செல்ல விரைந்தனர். இவர் தம் இச்செயலைக் கண்ணுற்ற புண்டரீகன் இவர்களை விளித்து. "அரமகளிர்! எதன் பொருட்டு விரைந்து செல்கின்றீர்கள்? உங்களுக்கு உற்றது யாது?" என்ன, அவர்கள் "ஐயா நாங்கள் ஓர் மெய் நோன்பாளரைத் தொழுதுவருவது எங்கள் தொழில். அவர் இங்கேதா னிருக்கிறார். பெற்றோரை யல்லலில் விட்ட பேதையர் தீவினையாளராதலின், அவர்கள் தம் கண்களில் படாவண்ணம் வெளிப் போகின்றோம். நீர் அத்தகையரல்லையோ ஆதலின்" என்றார். அம் மாற்றங் கேட்ட புண்டரீகனுக்கு இடித்துக் கூறிய இனிய தோற்றத்தாராய இழையார்தம் காட்

சியாலும், வாயுரையாலும் அறிவொரு சிறிது அரும்பியது. ஆயினும் அவர்களால் கூறப்பட்ட பெரியாரைப் பார்க்க விரும்பி, யவரிருக்குமிடஞ்சென்று அவரிருப்பதையும், அவர்தம் முதியோராய் பெற்றோர்க்குரிய கடன்களை விருப்பமாய்ச் செய்வதொன்றையே மேலாம் நோன்பாகக்கொண்டு ஒழுகுவதையுங் கண்டு அரும்பிய அறிவு நன்றாய் மலர்ந்து மணமுறுந் தன்மை யேற்றது. சென்றதற் கிரங்கினான். உள்ளம் நொந்தான். மனைவியைக் கடிந்தான். பெற்றோரிடம் தன்மனைவி பின்தொடரச் சேர்ந்தான். அவர்களிடம் தான் செய்த பிழைகளைப் பொருத்தருளுமாறு வேண்டினான். ஐயனேயென்றான் அம்மாவோ என்றான். ஆடினான் பாடினான். நீராட்டினான். உண்டியுதவினான். பாலூட்டினான். அடிபணிந்தான். அருமை தூற்றினான். வண்டியிலேற்றினான். எல்லா விடங்களையுங் கொண்டுபோய்க் காட்டினான். தன் உறையூர் சேர்த்தான் அன்று முதல் என்றும் பெற்றோரைப் பேணலில் பின்னிடாதுமுன் வந்தான். இவ்வகையாகப் புண்டரீகன் தன் நாளை நன்னாளாக்கிக் கொண்டு ஓர் நாள் பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடன்களை யாற்றுந் தறுவாயில் வேயிசைப் பூட்டி ஆக்களை மேய்த்தருன்றேந்திமுல்லைநில மக்களைப் பாதுகாத்த, பால் வெண்ணெயுண்ட, கஞ்சனைக்கொன்ற, பாஞ்சாலியை மானமழியாமற் காத்த, கன்னனுக்கு அவன் பிறப்பு கூறி உள்ளக்குறையைப் போக்கிய, பாண்டு மக்களுக்கு ஒற்றாக உற்ற, அவர் தம்போரில் அருச்சுனனுக்குத் தேரிலமர்ந்து உண்மை நிலையுணர்த்திப் போரினைமுடித்த, அவர் தங்களை அவனி யாளவைத்த, அன்பர்களுக் கருள் புரிந்த மணிவண்ணனும் கண்ணன் இன்று புண்டரீகனுக்குக் காட்சி கொடுக்க அவன் தன் முன்னர்ப்போந்து நின்றான். பெற்றோருக் குரியவற்றைப் புரியும் கடமையில் உள்ளத்தையும் உடம்பையும் ஆட்படுத்தியிருந்த புண்டரீகன் கண்ணபிரானது நண்ணலினைக் கண்டு இரண்டு செங்கற்களை அவர் முன்னர் எடுத்திட்டு அந்த அணையில் அவனியுண்ட கண்ணனை யிருக்கும்படி பணித்துத் தன்பெற்றோர்க் காற்றுவன எவற்றையும் இறையளவேனும் எஞ்சுதலுறாமல் இயற்றி முடித்தனன். பின்னர் கண்டனன் கல்லின்மேல் நின்ற கண்ணனை. கழிபேருவகை பூத்தனன். கால் தலை சேர்த்துப் பணிந்தனன். பதறினன். பாடினன். அவரைச்சுற்றிப் போந்தனன். அண்ணலே யென்றனன். அடிகளே என்றரற்றினன். பால், பழம், கண்டு, தேன் கொண்டுபடைத்தனன். உண்ணும்படி கெஞ்சினன். ஊட்டினன். அவனுண்ட எச்சிலைத் தானும் மற்றோரும் உண்டு களித்தனர். அன்றுமுதல் கண்ணனை யவ்வணையிலிருந்து அரிய காட்சி வேண்டியபோது கொடுக்குமாறு வேண்டினன். அங்ஙனமே ஆகுகவென்று அண்ணல் மறைந்தனன். இத்தகைய கடவுள் காட்சியையும், மேலாம் நிலைப்பேற்றையும் பெற்றோர்ப் பேணலாம் நோன்பொன்றாலேயே பெற்றனன் புண்டரீகமேலோன். அன்றுமுதல் அவ்வில் கண்ணன்கோட்டமாயது, பண்டரிபுரம் என்று பெயர் போந்தது. இன்றும் அன்பர்கள் அங்குச் சென்று அவனடி தொழுகின்றனர். ஆகவே, சிறுவர்காள்! அன்னையும் அப்பனும் முன்னறி கடவுளராதலின் அவர் தம்மை யன்போடு பாதுகாத்து, அவர்மொழிப்படி நடந்து அருள்வள்ளலின் அருளால் அடையவேண்டிய இனிமை யாவும் பெற்று இன்பம் நுகருவீராக எனக் கூறி முடித்தலாம்.

௧௨. ஓவியம் துயிற்றல்.

"சித்திரமுங்கைப் பழக்கம்" என்றபடி சிறுவர்களைப் பார்க்கும் படியும் வேறெவற்றினும் அவர்கள் உள்ளம் செல்லாதபடியும் அவர்களைக் கற்பிப்போனது செயலைக் கவனித்து அதுபோல் அவர்களது பலகைகளில் செய்யும்படி யவர்கட்குக் கூறிக் கற்பிப்போர் கரும்பலகையில் சுண்ணக் கட்டியால் பெரியதோர் அகர வெழுத்

த்தை வரைதல். சிறுவர்களையும் வரையச் செய்தல். எல்லா விளைஞரும் எழுதி முடித்தார்களா வெனப்பார்த்து எழுதக் கூடாமலிருந்தவர்கட்குக் கூடவிருந்து துணைபுரிந்து எழுதி முடித்தல். பின் கற்பிப்போர் கரும்பலகையினிடம் வந்து தாமெழுதிய அகர வெழுத்தை மாங்காய் வடிவமாகக் காட்டும் கோட்டைக் கூட்டி யொழுங்கு பெறச் செய்தல். பிள்ளைகளையும் அங்ஙனமே செய்யச் செய்தல். அவர்கட்கு நன்றாய் விளங்குமாறு கரும்பலகையில் அகர வடிவை மாங்காய் வடிவமாக்கலுக்காகச் சேர்க்குங் கோட்டை விரைவின்றிப் பல விடங்களில் பல வடிவங்களை யெழுதி யெழுதிக் காட்டல்.

அகர வடிவத்திற் காணுஞ்சுழி, கோடுகளைக் கலைத்து மாங்காய்க்குக் காம்பும், அது கிளையிற் பற்றியிருப்பது மாகச் சீர்ப்படுத்தல் அங்ஙனமே சிறுவர்களைச் செய்வித்தல். தெரியாதவரிடஞ் சென்று தாம் துணைபுரிந்து செய்து முடித்தல். பின்னர், சிறுவர்களைத் தங்கள் பலகையில் ஆகார வெழுத்தை வரையும்படி சொல்லல். தாமும் கரும்பலகையில் வரைதல். சிறுவர்களெல்லாம் வரைந்தான பின் ஆகார வடிவையும் முன்னரேபோல் மாங்காய் வடிவாக வரைந்து ஆ வடிவுக்காக கீழே சுழிக்கும் வரியை மாவிலை வடிவாக வரைந்து சிறுவர்களைப் பார்க்கும்படி கூறி யிது கிளையில் இலையோடு கூடிய மாங்காய். மாவிலை நீண்டு ஈட்டி போலிருக்கு மாதலால் அவ்வடிவ யிலையோடு கூடிய மாங்காய் என்று கூறியவர்களையும் அங்ஙனமே வரையும் படி செய்தல். தாம் அவர்கள் வரைவதைப் பார்த்துக் கூடாதவர்க்குத் துணை செய்தல். இலை வடிவில் நரம்பு கோடுகளை வரைந்து துடைக்க வேண்டிய கோடுகளைத் துடைத்தல். இலையோடு கூடிய மாங்காயாக மாறியது ஆ வென்னும் எழுத்து வடிவம் என்பதைச் சிறுவர்க்குரைத்து இகர வரிவடிவைச் சிறுவர்களையெழுதுமாறுசெய்தல். கற்பிப்போரும் கரும்பலகையில் வரைதல். சிறுவர்யாவரும் இகர வெழுத்தை யெழுதி முடித்ததும் தாம் இகரவடிவை அரசு அல்லது வெற்றிலை வடிவுண்டாகுமாறு கூட்டவேண்டிய கோடுகளை வரைந்து கூட்டி யழிக்க வேண்டியவற்றை யழித்தல். இவ்வடிவில் இலையின் நரம்புகளை வரைந்து காம்பையும் குறிப்பிட்டுச் சிறுவர்களையும் எழுதி முடிக்கச் செய்தல். பின்னர்ச் சிறுவர்களை விளித்து அவர்கள் காணக்கூடிய பொதுவான பறவைபெயரொன்றைக் கூறும்படி ஒவ்வொரு சிறுவனைக் கேட்டுக் காகத்தை விடையாக எச்சிறுவன் சொல்லுகின்றானோ அவன் சொன்னவுடன் பொதுவாய்ப் பார்க்கக் கூடிய பறவை காகம். அதன் தலையை வரைவதற்காக அவர்களை ஈகாரவடிவை யெழுதும்படி கூறித்தாமுங்கரும் பலகையில் எழுதியதைக் காகத்தின் தலையாக மூக்கு, கண்களைக் குறிப்பிடல். ஈகார வெழுத்தை வரைந்து ஈ யென்பது சிறுபறவையான தின்பண்டங்களிலுட்காரும் ஈக்குப் பெரியதான பறவை காகம். அதன்தலை ஈ கார வெழுத்திலிருந்து எழுதலாம் என்று கூறியவர்களை யெழுதுவித்தல். இவற்றிலிருந்து நேர்க்கோடு, குறுக்குக் கோடு, சாய்வு கோடு, வளைவு கோடுகளாலாகும் பலவகை ஓவியங்களையவர்களுக்குக் கற்பிக்கும் பாடங்களைக் குறித்தவாய் வரைந்து சிறுவர்களுக்குக் கை நேர்மை யமையுமாறு செய்தல் வேண்டும். (தொடரும்.)









சோழ. க. சச்சிதாநந்த முதலியார்,
சென்னை.

பெண்கள் பக்கம்

சீதை

(நுக-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகேசி தன் மைந்தன் பரதன் முடிசூடி வையம் புரக்கவும், இராமன் காடு சென்று ஈரேழு ஆண்டுகள் உறைந்திருக்கவுமே தான் விரும்பியதாகும் என்று தசரதரிடம் வெளியிட்டாள். தகுதியற்ற அவளது வேண்டுகோளைக் கேட்டுத் தசரதர் சொன்னசொல் தவறாத வினைத் தூய்மையாளராதலின் இடியேறுண்ட அரவுபோல் உளந்தடுமாறி நிலமிசை நெட்டுயிர்ப்புற்று வீழ்ந்தார். ஆசான் முதலியோரால் செய்தியறிந்த இராமன் தன் தந்தைசொல்லைக் காத்திடத் தான் காடு செல்வதின்பொருட்டு எல்லோரிடத்தும் விடைபெற்றுவரும் முறையில் இறுதியில் சீதையினிடஞ் சேர்ந்தனன். இராமன் தன்னைப்பிரிந்து செல்லுவதற்காக விடைகொண்டுபோக வந்திருப்பதையறிந்த சீதையாம் மெல்லியல் தன் கொழுநருடன் சேர்ந்து வைகும் வாழ்க்கை யொன்றே (மற்றெவர் பிரிவினையும் தனக்கு ஊறுண்டாக்காது) உள்ள மகிழ்வோடு தன்னைவாழ்வுற்று வரச்செய்யும் என்றும் இராமனது நிழல்போல் தான் இருந்து வருவதற்கு எவ்வகையிடையூறும் நேராதபடி தன்னைக் காக்கக் கடவியவர் தன் காதலரே யென்றும், தன்னைக்காப்பதாகக் கூறுவதையே தீசான்றாக மணமுடிந்த நாள் இராமன் தீவலஞ்செய்து உறுதிபடுத்தினதென்றும், அந்நாள் இராமனது கடைக்கண் நோக்கம் காத்தலில் தவறாதான் என்பதை விளக்கியதென்றும், அவனது தாழ்வினும் வாழ்வினும் தான் உடனிருந்து உறுவதை நுகர உரிமையுடையள் என்று மனைவியர் வாழ்க்கைத் துணைவியர் என்று வளம்பெறக் கூறப்படுகின்றமையின் என்றும் தான் இராமன் முன் அடிபணிந்து தானும் உடன் வரும்படியருளுமாறு இரந்து வேண்டினள். இராமன், பல்லூறுகள் கானில் பொருந்தும், கான் வாழ்க்கை கடுமையானது என்று பலபட எடுத்துரைத்தும் தன் தலைவனைப் பிரியுந் துன்பத்தைத் தன்னால் ஆற்றக்கூடாதென்று திட்டமாய்க் கூறத் தன் காதலன் இணங்கினான். சீதை இராமனைத் தொடர்ந்தாள். இலட்சுமணனும் இராமரைவிட்டுப் பிரிந்திருக்கமுடியாமல் தன் அண்ணனைப் பின்பற்றிச் சென்றான். இம்மூவரும் கடவுண்மாட்சிமையுடைய கங்கையாற்றை யடைந்து ஆங்கு ஓடஞ் செலுத்தும் குகன் என்பவன் இராமனிடங் காட்டிய பணிவாம் அன்பால் அக்கரை சேர்ந்து பரத்வாசமுனியின் உறைவிடம், பிரயாகை, வால்மீக முனி வைகுமிடம் இவற்றைக்கடந்து சித்ரகூட மலையடுத்து அங்குக் கொம்பு, கிளை, கொடி, தழைகளால் ஓர்குடிலிட்டு அதிலிருந்து வருவாரானார்.

இராமரை வழிவிடப்போன நல்லமைச்சர், இராமர் முதலிய மூவர் காடு சேர்ந்ததைத் தசரதர்க்குத் தெரிவிக்க, முன்னரே கலக்கக் கடலில் மூழ்கிக் கரை காணாதிருந்த அரசர்பிரான் இராமர் காடேகினதைக் கேட்ட அளவில் உயிர் நீங்கித் துரக்கநிலை யெய்தினார். தசரதரது உடலை நெய்ப்பொருளிலிட்டு அழியாவாறு அமைக்கச் செய்தனர் ஆசான் வசிட்டர். தங்கள் மாமனில்லம் சென்றிருந்த பரதசத்துருக்கினர்க்குத் தந்தையிறந்த செய்தி போக அவர்கள் மீண்டனர். மூத்தோனும் மற்றோனும் இல்லாமையைக்குறித்துவினவி யதற்கும் தந்தைபிரிவாற்றாமையால் இறந்ததற்கும் கருவி தந் தாயின் அரசாசையேயெனவறிந்து தாயின் செய்கையை வெறுத்துத் தானே தன் தந்தைக்குச் செய்யவேண்டிய நீர்க்கடன்களை நிறைவேற்றி முடித்தான். முடி சூடியாளச் சிறிதும் இணங்காமல் தன் அண்ணனோடு தானும் காடுசென்றுறைவதாகப் புறப்பட்டான். அவனையடுத்துத் தம்பியும், தாயரும், ஆசானும், அமைச்

சர் முதலியோரும் உடன்சென்றனர். காட்டில் சித்திரகூடவரையின் அருகில் இராமர் முதலியோர்உறைவிட முற்று இராமனை வருமாறு வேண்டினர். அவர்களால் அறிந்த இராமன் தன் தந்தை யிறந்தமைக்காகத் தானும் மற்றிருவரும் மிகுதியும் வருந்தினர். பின் இராமன் தனது மீட்சி தந்தைபின் கருத்தை முற்றுவித்த தாகா தெனக் கூறித் தன் தம்பி பரதனது அன்பைக் கொண்டாடி யவனது வேண்டு கோளின்படி தனது தாள் குரட்டைத் தந்தனன். அதனைத் தலைமிசைச் சுமந்து தநாடு சேர்ந்து அயோத்தி நகருக்கணித்தாய நந்திகிராமம் என்னுமிடத்து அண்ணனாரது அடி குறடுகளை அரியணையிலமைத்து அதன்கீழிருந்து அரசுபுரிந்துவந்தான். பின்னர் இராமன் முதலியோர் சித்ரகூடத்தினின்று அத்திரி முனியையும் அநுசூயைப் பன்னியையும் கண்டு வேறு அடவி சென்றனர். ஆங்கு வந்தெதிர்த்த விராதன் என்னும் அரக்கனைக்கொன்றும் பின் சரபங்கர், சுதீட்சினர் அகத்தியர்தம்பி சுமதி, அகத்தியர் முதலிய முனிவர் உறை நிலைகளை யடைந்து சிற்பகல் ஆங்காங்கிருந்து கழித்த

னர். அகத்தியர் தம்மிடம் முன்னொருநாள் இந்திரன் தந்தவில்,அம்புறை,வாள் முதலியவற்றை இராமற்குத்தரப் பெற்றுக் கௌதமியாற்றின் கரையே சென்றனர். வழியில் ஜடாயுவென்னும் தந்தந்தையின் நட்பினதான ஓர் கழுகு பறவையைக் கண்டு அளவளாவிப் பின் பஞ்சவடி யென்னு மிடத்தில் உறைவிடம் அமைத்துக்கொண்டு வதிந்தனர். ஆங்குச் சூர்ப்பநகை யென்ற ஓர் அரக்கி தோன்றி இராம லட்சுமணரைக் கவர விரும்ப, இலட்சுமணன் பெண்ணுதலின் கொல்லாமல் உடலினுறுப்புக்களைக் குறைவுறக் கொய்தனன். அதனால் அவள்தன் உடன்பிறந்தாராகிய கரதூஷணர் பலவரக்கரோடு போருக்குவர அவர்களையுங் கொன்றனர் இராமலட்சுமணர். இது கௌதமியாற்றங்கரையில் திரிகண்டகம் என்னுமிடத்தில் நடந்தது. பின்னர் இலங்கையாளும் இராவணனென்னும் தன் தமையனிடஞ் சென்று அவனுக்கு அழகைத் தருவதற்கேற்ற ஓர் அழகி பஞ்சவடியிலிருப்பாயும் அவனுக்காகத் தான் அப்பெண்மணியைக் கொண்டுர முயன்று அதன்பயனாகத்

தான் உடற் குறையுற்றதாகவுங் கூறி இராவணனைத் தூண்டினள். இதனால் இராவணன் தனக்குத் துணையாகத் தாடகையின்மகனான முன் உயிர் தப்பிய மாரீசனைக் கூட்டிக்கொண்டு சூழ்ச்சி வகையால் சீதையைக் கவர வெண்ணித் தக்கதைத் தேர்ந்தனன். அரக்கர் பொய்த் தோற்றங்களில் தேர்ந்தவராதலின் அம்முறையில் மாரீசன் ஓர் அழகிய பொன்னிறமான மான் கன்று வடிவு கொண்டு சீதைமுன் தோன்றினன். சீதை யதனைப் பிடிக்க முயன்றும் கிட்டாததுகண்டு இராமனே அதைப்பற்றிக் கொணர்வதா யதைத் தொடர்ந்தனர். மானும் இராமனும் மறைந்தனர். சிறிது நேரத்துக்கெல்லாம் இலட்சுமணா

சீதா வென்ற கூக்குரல் கேட்கச் சீதை இலட்சுமணனை யேவ, அவன் சீதை யிருந்த குடிலைச் சுற்றியும் தன்வில்லால் கோடிட்டு அதைக் கடக்காதிருக்கும்படி சீதையினிடஞ் சொல்லி இராமனிருந்த விடஞ் சேர்ந்தனன். அத் தறுவாயில் தனிமையாயிருந்த சீதையுள்ள விடஞ் சேர்ந்து இராவணன் எளிய யாதுலன் கோலத்தோடு சீதையை உணவிடும்படி யேற்றனன். சீதை யுள்ளதையிடவெளி வரவும் தனது அருமை, பெருமை, அரசுரிமைகளைக் கூறித் தன்னோடு வருமாறு கெஞ்சினன். அவனது மாற்றத்தால் வெறுப்புற்ற சீதையை யவளுறையுங் குடிலோடு தூக்கிச் சென்றனன். இராமனைத் தேடிச்சென்ற இலட்சுமணர் அண்ணனை நெருங்கியவுடன் இராமன் சீதையைத் தனித்துவிட்டுவந்தது தவறென்றுகூறி வந்தது பொய்த்தோற்றத்தில்வல்லவோர் அரக்கனே என்றும் ஏதோ சூழ்ச்சியால் மான் வடிவேற்று வஞ்சிக்க வந்து தன் கணையாலிறக்குங்கால் இரர்மனாகிய தனக்கு ஏதோ தீங்குற்றதாக அவர்களறியும்படி கபடாகப் பெயர் கூறிக் கூவி யிறந்ததென்றும் தெரிவித்து இதனால் சீதைக்கு ஏதோ ஊறு நேர்ந்திருக்கக் கூடுமென்று எண்ணி மிக்க விரைவாகத் தம் குடிலிருந்த விடஞ் சார்ந்து நோக்கினர். சீதையில்லாமையைக் கண்டு கலங்கினர். அங்குமிங்கும் தேடிச் சீதா சீதா வென்று கூவியொன்றுந் தோன்றாது இந்நிலைமையுற்றாள் சீதையென்று உணரவு முடியாமல் அசைவற்ச் செய்வதியாதெனத் தோன்றாது திகைத்து நின்றனர்.

(தொடரும்)

ஞானாம்பிகை.

CALENDAR—பஞ்சாங்கம்

ரௌத்திரி௵ கார்த்திகை௴		கேது 19-விரு-ப 22-மக-சுக் 26 கந்-சநி	குரு	1920 ௵ நவம்பர்௴—டிசம்பர்௴		
		செவ்	குரு சனி			
தக்ஷிணாயனம் கிரீஷ்மருது	பசலி 1329 / சாலி 1843	சுக் / குரு / ராகு புத		கலி 5022	கொல்லம் 1095	ஹிஜ்ரி 1339

ஹிஜ்ரி	இங்கிலீஷ்	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், யோகம், தியாஜ்யம்.	விசேஷம்.
4	16	1	செ	பஞ்-0-2, உத்ரா-47-8, கெ-56-24, திவி-2-58, ரா-29-24.	ஸ்கந்த ஷஷ்டி
5	17	2	புத	சஷ்-5-0, திரு-53-0, விரு-57-6 சே-2-7.	ஸப்தமி திதி
6	18	3	வி	ஸப்-9-0 அவி-58-0, தரு-57-7, திவி-3-50.	
7	19	4	வெ	அஷ்-12-45, சத-60, வியா-56-0, திவி-17-7.	திரேதாயுக
8	20	5	சனி	நவ-15-0, சத-1-44, அர்-54-26, திவி-18-27.	
9	21	6	ஞா	தச-16-5, பூரட்-4-25, வஜ்-51-38, திவி-28-59	ஏகாதிதி
10	22	7	திங்	ஏகா-15-45, உத்-5-51, சித-47-19, ரா-7-48.	உத்தன ஏகா
11	23	8	செ	துவா-14-14, ரேவ-7-0, விதி-43-6, ரா-26 51.	க்ஷீராப்தி பூஜா
12	24	9	புத	திர-11-36, அசு-5-9, வரி-37-31. திவி-28 23	சாபாயக-3
13	25	10	வி	○சது-7-0, ✱-பர-3-14, பரி-31-14, ரா-4-2.	ஸர்வாலயதீபம்
14	26	11	வெ	பூர்ந-3-30, பிர-55, கா-0-32, ரே-56-40, சிவ-24-24, ரா-11-13	விஷ்ணு ஆலய தீபம்
15	27	12	சனி	துதி-52-51, மிரு-53-20, சித்-17-5, திவி-10-18.	
16	28	13	ஞா	திரு-46-0, திரு-49-13, சா-9-26, தி-12-54.	
17	29	14	திங்	சது-41-10, புந-45-8, சுப-1-34, சுப்-5-17 திவி-17-	
18	30	15	செ	பஞ்-35-43, பூச-41-13, பிரா-46-10, திவி3-50.	
19	1	16	புத	சஷ்-30-7, ஆயி-37-34, மா-38-46, திவி-11-16,	அஹ-28-30-ராமா
20	2	17	வி	சப்-25-15, மக-34-30, வை-31-50, திவி-6-2.	திமா
21	3	18	வெ	அஷ்-21-6, பூர-3?-13, விஷ்-25-29, ரா-?5-15,	திதிதுவயம்
22	4	19	சனி	நவ-17-49, உத-30-42, பிரீ 19-49, ரா-21-14.	தெசமி
23	5	20	ஞா	தச-15-55, அஸ்-30-17, ஆயு-15-0, ரா-22-3	ஏகதிதி
24	6	21	திங்	ஏகா-14-29, சித்-31-0, சௌ-11-0, ரா-16-0.	ஸாவ ஏகாதசி
25	7	22	செ	துவா-14-41, சுவா-33-0, சோ-8-3, ரா-19-18,	திரதிதி-பிர-ராம
26	8	23	புத	திர-16-13, விசா-?6-13, அதி-6-7, ரா 18-30.	திவாமா-சதுதிதி
27	9	24	வியா	சது-18-5?, அனு-40-36, சுக-5 6, ரா-27-24.	அ,திதி
28	10	25	வெ	●-22-48, கேட்-45-52, திரு-5-0, தியா-0	அமாதிதி
29	11	26	சனி	பிர-27-27, மூல-52-0, சூல-5-33, துதி-7-55 ரா-19-34.	
30	12	27	ஞா	தி-32-34, பூரா-58-17, கெ-6-32, திவி-18-31.	
1	13	28	திங்	திரு-37-49, உததி-60, விஷ்-7-44, திவி-20-24	
2	14	29	செ	சது-42-52 உத்-4-37, து-8-53, திவி-15-29.	

தேவாலய உற்ஸவங்கள்.

10௳ அருணாசலதீபம், சர்வாலய தீபம்.
11௳ விஷ்ணு ஆலய தீபம்.
26௳ ஸ்ரீவாஞ்சிய உச்சவம்.

Printed by C. Muniswamy Mudaliar & Sons., at the Sivakami Villas Press, Madras.
& Published by C. M. Manickavel Mudaliar No. 4, Mallisvaran Koil St, Mylapore Madras

மதிப்புரை,

சென்னைப்பிரதம வழக்குரை மன்றத்தில் செங்கோற்றலைவராய்ச் சிறப்புற்
றவரும், ஆங்கிலமொழியில் நுண்மாண் புலவரென உயர்தரக்கல்வி
அவையினரால் உச்சிமேற்கொண்டு உரைகாணப் பட்டவரும்,
அரசர் பெருமானால் சிறப்புரை வழங்கப் பெற்ற
வரும், உலகியல் அரசியலறிவுகளில் அளவை
காணமாட்டா ஆற்றலுடையரென அரசாட்
சியினராலும் இந்தியமக்களாலும்
போற்றப் பெற்றவரும் ஆன

அறிஞர் சுப்பிரமணிய ஐயர்

Dr. Sir. S. SUBRAMANIYA IYER, K.C.I.E., LL. D.

அவர்களின்

திருமுகம்

'கலாசிந்தாமணி' என்னும் இப்பத்திரிகையை நான் நல்வரவேற்கின்றேன். இது குறைந்த விலையில் சிறந்த அரிய பொருட் கோவையுடையதாகும். எனக்கு முன்னமேயே இப்பத்திரிகையைப்பற்றிப் பல அறிவாளிகள் புகழ்ந்து கூறியிருப்பதை நான் பாராட்டுவதோடு அவர்களோடு நானும் சேர்ந்து கொள்ள நேர்ந்தமைக்கு மகிழ்கிறேன். இந்திய அறநெறிகளை விதைக்க வேண்டிய இன்றியமையாத இக்காலத்துக்கு இவ்வரிய பத்திரிகை ஏற்றதாயிருக்கிறது. ஆசிரியர் இப்போது வெளியிட்டுவரும் அரியவற்றோடு இக்காலத்து மக்கள் உளத்தில் பதியத்தக்கவாறு புதியமுறையில் இந்திய அறநெறிகளைப்பற்றி இன்னும் பல கட்டுரைகள் வெளியிட்டுவர வேண்டுமென்பது எனது கோரிக்கை. (ஒப்பம்) **S.** சுப்ரமணியம்.

DR. SIR. S. SUBRAMANIYA IYER, K.C.I.E., LL.D.